REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜனவரி 24 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN
தினகரன்
1932 - 2022

வரு. 91 இல. 20 | Tuesday 24, January, 2023 | 12பக்கங்கள் | 50/-




## தேர்தலை பிற்போடும் எண்ணம் எதுவுமே எம்மிடம் இல்லை

### உரிய திகதியில் நடத்துவதே எமது எதிர்பார்ப்பு



தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கமைய உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய திகதியில் நடத்த வேண்டும் என்பதுதான் எனது விருப்பம், தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் இதுவரை இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்த பின்னர் நேற்று முன்தினம் (22) ஐக்கிய தேசியக் கட்சியின்

04

## அரச ஊழியர்களது சம்பளத்தை 25 அல்லது 26இல் வழங்க தீர்மானம்

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் திகதியை நிதியமைச்சு நேற்று அறிவித்துள்ளது. அதற்கிணங்க நிறைவேற்று அதிகாரிகளுக்கான சம்பளம் எதிர்வரும் 25 அல்லது 26 ஆம் திகதி வழங்கப்படுமென்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

அதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள நிதி இராஜாங்க

04



## லிற்றோ Gas இன் விலைகள் ரூ.500 முதல் 750 வரை அதிகரிக்கும்

### லிற்றோ நிறுவன அதிகாரி ஒருவர் எதிர்வு கூறுகிறார்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

12.5 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை ரூபா 500 முதல் ரூபா 750 வரை அதிகரிக்கப்படவுள்ளதாக லிற்றோ நிறுவனத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார். இவ்வாறே 5 கிலோ நிறையுடைய சிலிண்டர் மற்றும் 2.3 கிலோ நிறையுடைய சிலிண்டர் ஆகியவற்றின் விலைகளும் அதிகரிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த விலை

04



### பெரும்பான்மை இல்லாத தீர்மானங்களால் பலனில்லை;

# உள்ளூராட்சி தேர்தல்; வலுப்படும் சந்தேகம்

### தேர்தல் திகதி தொடர்பில் வர்த்தமானி இன்னமும் வெளியிடப்படவில்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் கலாநிதி ப்ரதிகா மஹாநாமஹேவா அதிரடி தகவல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேர்தல் ஆணைக்குழுவின் பெரும்பான்மையின்றி மேற்கொள்ளப்படும் எந்தவொரு தீர்மானமும் செல்லுபடியற்றது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் கலாநிதி ப்ரதிகா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை மார்ச் 09 ஆம் திகதி நடத்துவதாக அறிவித்து தேர்தல் ஆணைக்குழு ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள போதும் தேர்தலுக்கான திகதியை வெளியிடும் வர்த்தமானியை இதுவரை வெளியிடவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வர்த்தமானி வெளியிடப்படுமானால் தேர்தல் தினத்தை வெளியிடுவதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எத்தனை பேர் விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்பது தொடர்பில் மக்களுக்கு தெளிவு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்களுக்கு இணங்க தேர்தலுக்கான திகதியை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவதன்றி வர்த்தமானி மூலம் அது வெளியிடப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு நாளை 25 ஆம் திகதி அரசியலமைப்பு சபை கூடவுள்ள பின்னணியில் தேர்தல் ஆணைக்

04

**தேர்தல் ஆணைக்குழுவின் பெரும்பான்மை ஆதரவுடனான தீர்மானங்களே செல்லுபடியாகும்**

**தேர்தல் திகதி ஊடகங்களில் அறிக்கையாக மட்டுமே வெளி வந்துள்ளதே தவிர அது வர்த்தமானியாக பிரசுரமாகவில்லை**

## கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நேற்று ஆரம்பம்



### பரீட்சை நடவடிக்கைகள் சுமுகமாக இடம் பெற்றதாக ஆணையாளர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நேற்று காலை ஆரம்பமானதுடன் பரீட்சை நடவடிக்கைகள் சுமுகமாக இடம்பெற்றதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

நேற்று ஆரம்பமான உயர்தரப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி வரை இடம்பெறும் என்றும் நாடளாவிய 2,200 பரீட்சை நிலையங்களில் மூன்று இலட்சத்து 31 ஆயிரத்து 709 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை பரீட்சையில் விசேட தேவையுடைய

04

**பரீட்சை சட்டங்கள் மீறப்பட்டால் 5 வருடங்களுக்கு பரீட்சை தடை**



சுகாதார சேவை ஊழியர்கள் நேற்று

**4 மணித்தியால வேலை நிறுத்தப் போராட்டம்**

ஆஸ்பத்திரிகளில் நோயாளர்கள் பெரும் அசௌகரியம்

03

## அரச சேவையில் மறுஅறிவித்தல் வரும்வரை இடமாற்றங்கள் இரத்து

### ஆணைக்குழு தலைவர் நிஹால் புஞ்சிஹேவா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரச சேவையில் இடமாற்றங்கள் செய்யப்பட முடியாது என தேசிய தேர்தல் ஆணைக் குழு அறிவித்துள்ளது. ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். மேலும் கூறுகையில்,

04



### சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள்

## பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு கட்டடத்திற்குள் நுழைந்தது எவ்வாறு?

### உண்மையைக் கண்டறியுமாறு ஆணைக்குழு அங்கத்தவர்கள் முறைப்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் என தெரிவிக்கும் தரப்பினர் பொது பயன்பாட்டு ஆணைக் குழு அமைந்துள்ள கட்டடத்திற்குள் எவ்வாறு பிரவேசித்தனர் என்றும் அதன்போது

04



## அரசியலமைப்பு பேரவை முதற்தடவையாக இன்று கூடுகிறது

### சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பில் கலந்துரையாடும்



சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபித்தல் உள்ளிட்ட பல தீர்மானங்களை மேற்கொள்வதற்காக இன்றைய தினம் காலை 9.30 மணிக்கு அரசியலமைப்பு பேரவை கூடவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. கலாநிதி பிரதாப் ராமானுஜன், கலாநிதி அனுலா விஜேசுந்தர மற்றும்

04

### சட்டமா அதிபரின் ஆலோசனையின் பின்னர்

## தேர்தல் செலவுகள் குறித்த சட்டமூலம் அமுலுக்கு வரும்

### சபாநாயகர் மஹிந்த யாப்பா தெரிவிப்பு



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தும் வகையிலான நியதிகளை உள்ளடக்கியுள்ள தேர்தல் செலவின ஒழுங்குபடுத்தல் சட்டமூலம்

04


### 2022 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலத்தினுள்

## தேயிலை ஏற்றுமதி மூலமாக 411.9 பில். ரூபா வருமானம்

### 2021உடன் ஒப்பிடுகையில் 147.74 பில். அதிகம்

தேயிலை ஏற்றுமதி மூலம் கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 411.9 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் முழு வருடத்திலும் கிடைக்கப்பெற்ற

04



## தமிழரசுக் கட்சி தனித்து போட்டி; ஆரோக்கியமான விடயமல்ல

### தமிழ் மக்களிடையே பாரிய அதிருப்தி என்கிறார் செல்வம் MP



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடுவது என்பது ஆரோக்கியமான விடயமல்ல. கூட்டமைப்பின் பிளவு மக்கள் மத்தியில் தற்போது பாரியதொரு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அனைவரும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்றும் அதன்

04

## தேர்தல் சட்டங்களை மீறாது பிரசாரங்களை மேற்கொள்ளவும்

### மக்களிடம் பொலிஸ் தரப்பிலிருந்து வேண்டுகோள்



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை அமைதியான முறையில் முன்னெடுக்குமாறு பொலிஸ் ஊடகப்பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, தேர்தல் சட்டங்களை மீறுவது தொடர்பான முறைப்பாடுகளை தொலைபேசி, தொலைநகல், வைபர் மற்றும்

04



**இந்தியாவை சித்தரித்து பட்டம் ஏற்றும் விழா**

யாழ். வல்வெட்டித்துறையில் நிகழ்வு

03



**நிர்மாணத்துறை நிறுவனங்களுக்கான நிலுவைப்பணம் விரைவாக பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை**

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

03

## பிக்பொஸ் நிகழ்ச்சியில் 50 இலட்சம் வென்ற அசீம்

### கிண்ணம், பணப்பரிசு, கார் அவர் வசமானது



பிக்பொஸ் நிகழ்ச்சியின் இறுதி நிகழ்வின் வெற்றியாளராக அசீம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் வெற்றிக்கிண்ணத்தையும், பரிசுப் பணம் மற்றும் பெறுமதியான காரையும் தட்டிச் சென்றுள்ளார்.

04

## A/L பரீட்சார்த்திகளுக்கு இடையூறு ஏற்படுத்தாதீர்கள்

### வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து



உயர்தர பரீட்சார்த்திகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வேட்பாளர்களுக்கு, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. அனைத்து தரப்பினரும் தேர்தல் சட்டங்களை மீறாது செயற்பட வேண்டும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்

04

## இலங்கையிலிருந்து மேலும் ஐவர் தமிழகத்தில் தஞ்சமடைவு

### கிளிநொச்சியிலிருந்து தனுஷ்கோடி வந்தடைந்தனர்




**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் 5 இலங்கை தமிழர்கள் ராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி கடற்கரையில் தஞ்சமடைந்தனர். இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 218 ஆக உயர்ந்துள்ளது.

04

### 1917ஆம் ஆண்டு இலங்கையில் வெளியிடப்பட்ட

## இரண்டு ரூபா நாணயத்தாள் நாலரை இலட்சத்திற்கு விற்பனை




1917ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாணயத்தாள் ஒன்று நான்கரை இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது. இந்த இரண்டு ரூபாய் நாணயத்தாளின் பின்புறம் அச்சிடப்படவில்லை என்பதுதான் இதன் சிறப்பு. இந்த நாணயத்தாளின் முன் பக்கம் மட்டும்

04

**90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# இயேசுவுக்கு சான்று பகரும் வாழ்வு

## புனித பவுலின் மனமாற்ற பெருவிழா

திருச்சபையானது எதிர்வரும் வெள்ளிக்கிழமை புனித பவுலின் மனமாற்றப் பெருவிழாவை கொண்டாடுகின்றது.


திருச்சபை உலகளாவி பரவுவதற்கு அடித்தளமிட்டவர் புனித பவுல் என்பதை எவராலும் மறுக்க முடியாது. 'புறவினத்தாரின் திருத்தூதர்' என்று அழைக்கப்படும் தூய பவுலடியாரின் மனமாற்றப் பெருவிழாவை கொண்டாடும் நன்நாளில் இவ்விழா நமக்கு என்ன செய்தியைத் தருகிறது என்பதை சிந்திப்பது சிறந்தது.

பரிசுத்த வேதாகமத்தில் ஒரு நிகழ்வு மூன்று முறை சொல்லப்படுகின்றது என்றால் அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ளலாம் என்பது எழுதப்படாத விதி.

அந்த விதத்தில் பவுலடியாரின் மனமாற்ற நிகழ்வும் மூன்றுமுறை சொல்லப்படுகிறது (திப. 9, 122, 22, 316, 26, 923) என்பதை அறிகின்றபோது அந்நிகழ்வு எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

பவுலடியாரின் மனமாற்றம் கிறிஸ்தவத்தின் – திருச்சபையின் எல்லைகளை உலகமெங்கும் விரிவுபடுத்தியது என்றால் அது மிகையாகாது.

இவ்விழாவை பவுலின் மனமாற்றப் பெருவிழா என்று அழைப்பதைவிட பவுலின் அழைப்பு என்று சொல்வது மிகவும் பொருத்தமானது.



ஏனென்றால் இந்த நிகழ்வின் வழியாக சவுலாக இருந்தவர் பவுலாக மாறுகின்றார்.

"மனமாற்றம் ஒருவரது வாழ்வின் உயர் குறிக்கோளை சரியான பாதையில் மாற்றி அமைக்கிறது. அதனால் பழக்கவழக்கத்திலும் பண்பாட்டிலும், நடத்தையிலும் முழுமையான மாற்றம் உண்டாகிறது. இதனால் உடன் இருப்பவர்களின் வெறுப்பைக் கூட பெற வேண்டிய நிலை உண்டாகிறது" என்பார் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட்.

அந்த வகையில் பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் சக்கேயுவின் மனமாற்றம் அவ்வாறானது.

சக்கேயு வாழ்வைத் தொலைத்து வசதி வாங்கியவர். ஆனால் அவருடைய உள்ளத்தில் நிம்மதியில்லை. அவரின் இதயம் கரைதேடும் அலையாய் கடவுளைத் தேடியது.

அப்படிப்பட்டவரை இயேசு அழைக்கிறார்; "இன்று உன்னுடைய வீட்டில் நான் விருந்துண்ணப் போகிறேன்" என்கிறார். உடனே அவர் புத்தொளி பெற்றவராய் இயேசுவிடம் "எவரிடமாவது திருடி இருந்தால், யாரையாவது ஏமாற்றிக் கவர்ந்திருந்தால், ஏய்த்துப் பிழைத்திருந்தால், சொத்தை அபகரித்திருந்தால், நான்கு மடங்காய் திருப்பித் தந்துவிடுகிறேன்" என்கிறார்.

இதைகேட்ட இயேசு, "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" என்கிறார். இயேசு அழைத்ததால் சக்கேயு மனமாற்றம் பெற்று புதியதொரு வாழ்வை வாழத் தொடங்குகிறார்.



அதைப் போன்றுதான் பவுலடியாரும். கடவுள் தன்னை அழைப்பதற்கு முன்பாக திருச்சபையை மிகக் கொடுமையாகத் துன்புறுத்தி, ஒழிக்க முயன்றவர். அப்படிப்பட்டவரை இறைவன் தாயினும் சாலப்பரிந்து தடுத்தாட்கொள்கிறார்.

இனி வாழ்பவன் நானல்ல. என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார் என்று கூறக்கூடிய நிலையை அடையச் செய்கிறார். அத்தோடு மட்டுமல்லாமல் தன் மகனைப் பற்றிய நற்செய்தியைப் பிற இனத்தவர்க்கு அறிவிக்குமாறு உயரிய பணியையும் அவருக்குக் கொடுக்கிறார்.

அதனால்தான் புனித பவுல் கிறிஸ்துவால் ஆட்கொள்ளப் பட்டவன் என்ற முறையில் தான் பெற்ற பேற்றை உலகத்திற்கு வழங்க முன் வந்தார்.

யார் கிறிஸ்தவ மதத்தை அடியோடு அழிக்க நினைத்தாரோ, யார் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுபவர்களை சிறையில் அடைக்க நினைத்தாரோ அவரே கிறிஸ்துவுக்காக உயிர் துறக்க துணிந்தார் என்பதுதான் மிகவும் விந்தையானது.

2கொரிந்தியர் 11 ஆம் அதிகாரத்தில் பவுலடியார் கிறிஸ்துவாக தான்பட்ட வேதனைகளை சுட்டிக்காட்டுவார், "நான் அவர்களை விட அதிகமாய்ப் பாடுபட்டு உழைத்தேன்; பன்முறை சிறையில் அடைபட்டேன்; கொடுமையாய் அடிபட்டேன்; பன்முறை சாவின் வாயிலில் நின்றேன். ஐந்துமுறை யூதர்கள் என்னைச் சாட்டையால் ஒன்று குறைய நாற்பது அடி அடித்தார்கள். 25 மூன்றுமுறை தடியால் அடிபட்டேன்; ஒருமுறை கல்லெறிபட்டேன்; மூன்று முறை கப்பல் சிதைவில் சிக்கினேன்; ஓர் இரவும் பகலும் ஆழ்கடலில் அல்லலுற்றேன்.

பயணங்கள் பல செய்தேன்; அவற்றில், ஆறுகளாலும் இடர்கள், கள்வராலும் இடர்கள், என் சொந்த மக்களாலும் இடர்கள், பிற மக்களாலும் இடர்கள், நாட்டிலும் இடர்கள், காட்டிலும் இடர்கள், கடலிலும் இடர்கள், போலித் திருத்தூதர்களாலும் இடர்கள், இப்படி எத்தனையோ இடர்களுக்கு ஆளானேன். பாடுபட்டு உழைத்தேன்; பன்முறை கண்விழித்தேன்; பசிதாகமுற்றேன்; பட்டினி கிடந்தேன்; குளிரில் வாடினேன்; ஆடையின்றி இருந்தேன்" என்று வரிசைப்படுத்திக் கொண்டே போவார்.

இவையெல்லாம் பவுலடியார் தான் துன்புறுத்திய இயேசுவின் திருச்சபைக்காக பட்ட கஷ்டங்கள் ஆகும். ஆக, பவுலடியார் எத்தனையோ துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவித்தாலும் அவர் கிறிஸ்துவாக எல்லாவற்றையும் செய்தார். எனவே பவுலடியாரின் மனமாற்றப் பெருவிழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் நாமும் உலகப் போக்கிலான வாழ்க்கை வாழ்வதை விடுத்து, உண்மைக் கடவுளாகிய இயேசுவாக வாழ முயற்சி செய்வோம்..

தவறான, உலகப் போக்கிலான வாழ்க்கை வாழ்வதை விடுத்து, கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழுவோம். உலகெங்கும் சென்று படைப்பிற்கு எல்லாம் நற்செய்தி அறிவித்து, இயேசுவுக்கு சான்று பகர்வோம் இறையருள் நிறைவாய் பெறுவோம்.

அருட்பணி. மரிய அந்தனி






# திருப்பாலத்துவ மறை பரப்பு ஞாயிறு

## திருச்சபை ஜனவரி 29 ல் சிறப்பிக்கின்றது

கத்தோலிக்க திருச்சபை எதிர்வரும் 29 ஆம் திகதி திருப்பாலத்துவ மறை பரப்பு ஞாயிறை சிறப்பிக்கின்றது.

மறைபரப்பு ஞாயிறு என்பதன் கருப்பொருள் அனைத்து சிறுவர்களையும் எல்லையற்ற விதத்தில் அன்பு செய்யும் இறைவனுக்கு சாட்சி பகர்ந்து வாழ்வதற்காக அவர்களை ஊக்குவிப்பதாகும்.

**உணர்வுகளை புரிந்துகொண்டு பெருந்தன்மையுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கான இறை அழைப்பு**

அதுமட்டுமன்றி அனைத்து சிறுவர்கள் மீதும் அக்கறையும் அன்பும் கொண்டு அவர்களுக்கான பிரார்த்தித்தல் சமூகத்தில் வாழும் அனைவரதும் கடமையாகவேண்டும்.

"என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரை பிடிப்பவர் ஆக்குவேன். (மத்தேயு 19)" இறைவனுக்கு உகந்தவர்களாக வாழ்வதன்மூலம் நாம் மனிதரை பிடிப்பவர்களாக மாறுகின்றோம். இயேசு எம்மை அவரது மறை தூதராக அழைக்கின்றார் எனும் கருப்பொருளை சிந்திக்கும் போது இது யாருடைய வற்புறுத்தலோ அல்ல நிபந்தனையோ அல்ல. திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட ஆன்மிக கொடையாகும்.

"நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ உலகம் முடியும் வரை என்னாலும் நான் உங்களோடு இருக்கின்றேன்." (மத்தேயு 28 20)

இறைவனோடு இணைந்திருந்தால் சாத்தியமற்றவையும் சாத்தியமாகும் என நாம் விசுவாசிக்கின்றோம். அதற்காக எமது திருத்தந்தை பரிசுத்த பாப்பரசர் "மந்தைகளின் மனதை உணரும் கிறிஸ்தவர்களாக மகிழ்வுடன் பணிபுரிவதற்கு இறைவனிடத்தில் ஆசியை வேண்டுங்கள் " எனத் தெரிவித்துள்ளார்.

உண்மையில் இறைவனால் படைக்கப்பட்டு அவருடைய மறையுண்மைகளை அனுபவமாக்கிக் கொண்டவர்களே மறைதூதர்கள். தற்போது இவ்வுலகில் வாழும் மறைதூதர்களும் இவ்வாறான ஆழமான அனுபவத்தை கடைப்பிடிப்பார்களாயின் நம்பிக்கைக்குரிய விருட்சமொன்றை ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமதாக்கிக்கொள்வர்.

விசுவாசமுள்ளவர்களாக புனித வாழ்வு வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நற்செய்தி அறிவிப்பானது திருமுழுக்கின் மூலம் ஆரம்பமாகின்றது. அந்தவகையில், இறைவார்த்தைக்கு சான்று பகரும் வாழ்வு வாழ்வதற்கு நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இயேசுவின் சீடர்கள் மூலமாகவும் அவர்களின் உயிர்த் தியாகங்கள் மூலமாகவும் மறை தூதுப் பணி புத்தாக்கம் பெற்றது. எனவே இந்த வருடம் நாம் சிறப்பிக்கின்ற திருப்பாலர் மறை பரப்பு ஞாயிறு மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு பெருந்தன்மையுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கு இறைவன் எமக்குத் தரும் அழைப்பாகும்.

அருட்பணி
பசில் ரொஹான் பெர்னாண்டோ
(பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனர்)

# விசுவாசத்தைக் கட்டிக்காக்க வீர மரணமடைந்த வேதசாட்சி புனித செபஸ்தியார்

விசுவாசத்தைக் கட்டிக்காக்க வீர மரணமடைந்து, விண்ணுலகப் பேரின்ப வாழ்வை தன் உடைமையாக்கிக் கொண்ட வீரப் பெருமகன் புனித செபஸ்தியார். பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த நர்போன் நகரில் பிறந்து, இத்தாலியிலுள்ள மிலான் நகரில் வளர்ந்தவர் அவர்.. இவரது பெற்றோர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்களாகையால் இவர் இத்தாலியில் மிலான் நகரில் வளர்க்கப்பட்டார். கிறிஸ்தவர்கள் என்று தெரிந்தாலே கொல்லப்படும் சூழ்நிலையிலும் கிறிஸ்துவின் பற்றாளராக தன்னை வளர்த்துக்கொண்டார்

கிறிஸ்துவுக்குப் பின் சுமார் 283 ஆண்டில் உரோமைப் பேரரசன் கறினுசின் படையில் செபஸ்தியார் சேர்ந்து சிறந்த படைவீரன் ஆனார். வேதத்திற்காக சிறைக்கூடங்களிலே அடைபட்டு வேதனைபட்டுக் கொண்டிருந்த விசுவாசிகளை சந்தித்தார்.



அன்பொழுக அவர்களுக்கு ஆறுதல் கூறினார். கிறிஸ்துவின் அன்பைக் காட்டி வீர உரைகளை ஊட்டி விசுவாசத்தில் அவர்கள் நிலைத்து நிற்கச் செய்தார். கிறிஸ்தவர்களுக்குத் தொண்டு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு செயல் பரிந்த அவர் தனது உயர் பதவியையும் உடைமைகளையும் பெரிதென எண்ணவில்லை.

சிறையில் வேதனையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த மாற்குஸ், மார்செல்லியானுஸ் என்ற இரு சகோதரர்கள் வேதவிசுவாசத்தில் தத்தளித்துக் கொண்டிருந்ததை அறிந்த செபஸ்தியார், அவர்கள் இருந்த சிறைக்கு விரைந்து சென்று விசுவாசத்தில் அவர்கள் நிலைத்து நிற்கும்படி செய்தார்.

அந்த நேரத்தில், அங்கு இருந்த சோயே என்னும் ஊமைப் பெண், புனித செபஸ்தியாரின் பாதங்களைப்பற்றி ஆறு ஆண்டுகளாக பேசாமடந்தையாக இருக்கும் தனக்கு பேசும் வரத்தைப் பெற்றுத் தருமாறு வேண்டினாள்.

புனிதரும் மனமிரங்கி அவளது வாயின் மேல் சிலுவை அடையாளம் வரையவே, அவளது வாயும் திறக்கப்பட்டு முன்பு போல் அவள் பேசத் தொடங்கினாள். புனிதர் தனக்கு வழங்கிய நன்மைக்கு நன்றிக்கடனாக அவளும் அவளது கணவரான நிக்கோஸ்கிராத்துஸ் என்பவரும் மனம்மாறி கத்தோலிக்கத் திருமறையைத் தழுவினர்.

தவிர மாற்குஸ், மார்செல்லியானுஸ் இவர்களின் மனைவி மக்களும், பெற்றோரும், சிறைக்காவலனான குளோத்தியுஸ் என்பவனும் மற்றும் பதினாறு பேரும்,சிறை அதிகாரியான நிக்கோஸ் கிராத்துஸின் உதவியுடன் போலிகார்ப் என்னும் குருவை அணுகி, வேத விளக்கம் பெற்று ஞானஸ்நானம் பெற்றனர்.

உரோமைப் பேரரசன் கிரோமாசியுஸ் தன் சிறை அதிகாரியான நிக்கோஸ்கிராத்துஸ் ஞானஸ்நானம் பெற்றதன் காரணமாக அவனுக்கு இருந்த சூலைநோய் குணமடைந்ததை கேள்வியுற்று, அவனைப் போல் தானும் குணம டைய கத்தோலிக்க மறையைத் தழுவ எண்ணங்கொண்டு மறையைப்பற்றி கண்டுணர விரும்புவதை அறிந்த செபஸ்தியார் அவனிடம் சென்று, அவனுக்கு திருமறை விளக்கமளித்து அவனது பிணியை அகற்றி அவனுக்கும் அவனது மைந்தனுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார்.

பேரரசர் தான் பெற்ற உடல்நலத்தின் நன்றிக்கடனாக சிறையில் அடைபட்டுக் கிடந்த கிறிஸ்தவர்களை உடனடியாக விடுவித்ததுமன்றி, தனக்கு அடிமைகளாயிருந்த 1400 கிறிஸ்தவர்களையும் விடுவித்து தானும் அரச சிம்மாசனத்தை விட்டு இறங்கினான்.

283 இல் தியோக்கிளேசியன் உரோமைப் பேரரசனானான் புனித செபஸ்தியாரின் நற்பண்பகளையும், நெஞ்சுறுதியையும் கண்டு அவரை தனது மெய்காப்பாளராக்கினான். உரோமையெங்கும் வேதகலாபனை பற்றிப் படர்ந்து பயங்கர விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த வேளையில், கிறிஸ்தவர்களை பேரரசரிடமிருந்து மீட்க வல்லவர் புனித செபஸ்தியாரே என்றனர் கிறிஸ்தவர்கள்.

திருச்சபையின் தலைவராயிருந்த காய்யுஸ் என்னும் பாப்பவிடம் செபஸ்தியார் நேரில் சென்று அந்த புனிதப் பணிக்கு தன்னையே அர்ப்பணித்து நின்றார். ஆனால் பாப்ப, போலிகாரப் என்ற குருவை அனுப்பி புனிதரை பேரரசரின் மெய்காப்பாளராக இருந்து கொண்டே கிறிஸ்தவர்களுக்காகப் பேராடுமாறு கேட்டுக் கொண்டார்.

286 இல் வேதகலாபனை உச்சக்கட்டத்தை அடைந்தது. பாப்பவும் சில கிறிஸ்தவர்களும் அரண்மனைக் காவலன் ஒருவனின் வீட்டில் மறைவாயிருந்தனர். பேசாமடந்தையாயிருந்து பின் செபஸ்தியாரால் பேசும் வரம் பெற்ற சோயே என்பவளை கிறிஸ்தவ எதிரிகள் நெருப்பில் போட்டு சுட்டெரித்தனர். அதைத் தொடர்ந்து மாற்குஸின் தந்தை திறங்குலினுசும் கல்லால் எறியப்பட்டு வேதசாட்சியாக மரித்தனர்.

நிக்கோஸ்கிராத்துஸ், குளோதியுஸ், கஸ்தோரியுஸ், விக்தோரினுஸ் போன்றோர் சித்திரவதைக்குள்ளாக்கி ஆழ்கடலில் தள்ளப்பட்டனர். மாற்குஸ், மார்செல்லியானுஸ் ஆகியோரைப் பிடித்து ஈட்டியால் குத்திக் கொன்றார்கள்.



பேரரசன், புனித செபஸ்தியாரும் ஒரு கிறிஸ்தவர் என்று இறுதியாக அறிந்து அவரைத் தன்முன் அழைத்து, நன்றி மறந்தவன் என்ற பழியை அவர் மீது சுமத்தி, அவரைக் கண்டித்தான். அதற்கு அவர், இறைவனை வாழ்த்தி, வணங்கி, அவரது திருவுளத்திற்கேற்பவே தான் நடப்பதாயும், அரசர்களின் சேம நலத்திற்காகவே தாம் பாடுபடுவதாயும் செபஸ்தியார் அமைதியாகக் கூறினார்.

இதைக் கேட்ட அரசன் கோபாவேசம் கொண்டு புனித செபஸ்தியாரை தூணில் கட்டி வைத்து அம்பால் எய்து கொல்ல ஆணை பிறப்பித்தான். அவ்வாறே காவலர் அவரை கம்பத்தில் கட்டி இரக்கமின்றி அவர்மீது அம்பால் எய்து அவர் இறந்தார் என்று தவறாக நினைத்து போய் விட்டார்கள்.

ஆனால் இரேனாள் என்னும் மாது புனிதரை அடக்கம் செய்ய இரவில் வந்து பார்த்தபொழுது அவர் உயிரோடு இருக்கிறாரெனக் கண்டு வியப்பற்று அவரைத் தன் வீட்டிற்கு இரகசியமாய் அழைத்துப் போனாள். அங்கே அவர் மீண்டும் குணமடைந்தார்.

கிறிஸ்தவர்கள் அவரை எதிரிகளுக்கு மறைவாயிருக்க மன்றாடிக் கேட்டுக் கொண்டும் அவர் கேளாமல், அரசன் தனது கோவிலுக்கு போகும் வழியில் நின்று, பேரரசரே! கிறிஸ்தவர்கள் மீது கோள் சொல்லும் பரட்டர்களின் வார்த்தைகளைக் கேட்டு நீர் மதியை இழக்கலாமா? கிறிஸ்தவர்களைவிட உமக்கு பிரமாணிக்கமுள்ள ஊழியர்கள் இல்லையென்றும் அவர்களுடைய வேண்டுதலால் உமக்கு நன்மையே அதிகம் கிடைத்திருக்கிறதென்றும் அறிவீர் என்றார்.

மமதை கொண்ட மாமன்னன் தியோக்கிளேசியான் தான் அம்புகளுக்கு இரையாக்கிய மனிதன் தன்முன் நிற்பதைக் கண்டு விழித்து அம்புகளால் எய்து கொல்ல நாம் அனுப்பின செபஸ்தியான் நீதானா? என்றான்.

இவ்வாறு கூறியதைக் கேட்ட அரசன் வெகுண்டெழுந்து, செபஸ்தியாரை தடிகளால் அடித்துக் கொல்லும்படி ஆணையிட்டான். அப்படியே புனித செபஸ்தியார் கி.பி.288 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் நாளில் அடிக்கப்பட்டு மரித்து மோட்ச முடிபெற்றார்.

புனிதரின் காட்சியில் எச்சரிக்கப்பட்ட லூசினாள் என்பவள் புனிதரின் திருவுடலை இரகசியமாக எடுத்து வந்து புனித இராயப்பர் சின்னப்பர் கல்லறை வாசற்படியின் அருகில் அடக்கம் செய்தாள். புனித செபஸ்தியார் இறைபதம் அடைந்த அந்த தினத்தையே திருச்சபை புனிதரின் திருநாளாக நினைவுகூறுகிறது.

எல்.எஸ்

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 24 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN


| தொழுகை நேரம் | |
|---|---|
| சுபஹ் | 05.09 |
| லுஹர் | 12.23 |
| அஸர் | 03.45 |
| மஃரிப் | 06.16 |
| இஷா | 07.30 |

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் தை 10
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



நிர்மாணத்துறை நிறுவனங்களுக்கான நிலுவைப்பணம்

# விரைவாக பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நிர்மாணத்துறையில் சிறு மற்றும் நடுத்தர, பாரிய நிர்மாணத் துறை நிறுவனங்களுக்கு அரசாங்கம் வழங்க வேண்டிய நிலுவைப் பணத்தை விரைவாக பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். திறைசேரியிலிருந்து கிடைக்கும் நிதிக்கிணங்க கட்டம் கட்டமாக அதனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் இடம்பெற்ற நிர்மாண கைத்தொழில் துறை அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் இடையில் விசேட பேச்சுவார்த்தையொன்று இடம் பெற்றுள்ளது. 04



தேசிய இளைஞர் படையணியின் வாழ்க்கை திறன் அடிப்படை பயிற்சி பாடநெறிக்கான City & Guilds உரிமை தரச்சான்றிதழை City & Guilds நிறுவனத்தின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி ஹிபாஸ் அஸ்ரப் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளித்தார். பிரதமர் அதனை தேசிய இளைஞர் படையணியின் தலைவர் கர்னல் ரத்நாயக்கவிடம் கையளித்தார்.

# இந்தியாவை சித்தரித்து பட்டம் ஏற்றும் விழா

## யாழ். வல்வெட்டித்துறையில் நிகழ்வு



இந்தியாவை சித்தரித்து யாழ். வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாச கடற்கரையில் பல்வேறு வடிவங்கள் மற்றும் அளவுகளில் பட்டங்கள் பறக்கவிடப்பட்டுள்ளன. 04

# கொழும்பு பங்குச் சந்தை நேற்று உயர்ந்த மட்டத்தில்

## முதலீட்டாளர்களின் நம்பிக்கை உறுதி

கொழும்பு பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் நேற்றைய தினம் (23) உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டதோடு பங்குச் சந்தையின் விற்பனை ஆதாயம் போன்று விலைகளும் பாரியளவில் அதிகரித்திருந்தன.

இந்தியா மற்றும் சீனா இலங்கையுடனான கடன் மறுசீரமைப்புக்கான ஒப்புதலை அளித்ததன் காரணமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக 04

முட்டை, கோழி இறைச்சி விலைகள்:

# துறைசார்ந்த அனைவரும் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டால் தீர்வு காண முடியும்

## ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கோழி இறைச்சி மற்றும் முட்டை கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக அனைத்து தரப்பினரும் கூட்டு இணக்கப்பாட்டுடன் செயல்படுவதன் அவசியம் தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பான முக்கிய 04

சீன அரசின் நன்கொடையான எரிபொருள்

# விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க 122 மில்லியன் ரூபா செலவு

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள எரிபொருளை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளுக்காக 122 மில்லியன் ரூபா அரசாங்கத்திற்கு செலவாகும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. சீன அரசாங்கமானது இலங்கையிலுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்காக 6.8 மில்லியன் லீற்றர் டீசலை வழங்கியுள்ளது. விவசாயிகளுக்கு அறுவடை காலத்தில் அதனை பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான நடவடிக்கைகள் 04

# சுகாதார சேவை ஊழியர்கள் நேற்று நான்கு மணித்தியால வேலைநிறுத்தப் போராட்டம்

## நாடளாவிய ஆஸ்பத்திரிகளில் நோயாளர்கள் பெரும் அசௌகரியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தேசிய வைத்தியசாலை உட்பட நாடளாவிய அனைத்து வைத்தியசாலைகளில் சிறு சுகாதார சேவையாளர்கள் நேற்று நான்கு மணித்தியால வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் நாடளாவிய ஆஸ்பத்திரிகளில் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்ததாக 04

2023–பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள்

# இந்தியாவிடமிருந்து முதற்கட்ட கடதாசித் தொகை; அச்சுப்பதிப்பு செயற்பாடுகள் ஆரம்பம்

## கல்வியமைச்சு தெரிவிப்பு




**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல்களை வழங்குவதற்காக இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் முதலாவது தொகை கடதாசி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் அச்சுப்பதிப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு 04

மாத்தறை மாவட்டத்தில்

# அரசியல் கட்சிகள், சுயேச்சை குழுக்கள் வேட்புமனு தாக்கல்; 04 மனுக்கள் நிராகரிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மாத்தறை மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் 114 வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன. இவற்றுள் 04 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக மாத்தறை மாவட்ட செயலாளர் வை. வி. விக்கிரமசிறி தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் ஒரு மாநகரசபை, ஒரு நகர சபை உட்பட 15 பிரதேச சபைகள் அடங்கலாக 04

மரண தண்டனை கைதி உள்ளிட்ட சிறைக்கைதிகள்

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றினர்

## சிறைச்சாலை திணைக்களம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிறைச்சாலைகளில் விளக்கமறியலில் தண்டனை அனுபவித்துவரும் மரண தண்டனை கைது உட்பட சிறைக்கைதிகள் பலரும் இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலை மெகசின் சிறைச்சாலை மற்றும் யாழ்ப்பாண சிறைச்சாலைகளில் தடுத்து 04

# தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பம் கோரல் நேற்று நள்ளிரவுடன் நிறைவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பம் கோரல் நேற்று நள்ளிரவுடன் நிறைவு பெற்றுள்ளது. உறுதிப்படுத்தப்பட்ட தபால் மூல விண்ணப்பங்களை மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் கையளிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை, உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் நடவடிக்கைகள் இந்த வாரம் ஆரம்பமாகும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# ஊடகவியலாளர் அஷ்ரப் ஏ. சமதின் மோட்டார் சைக்கிள் திருட்டு



## வெள்ளவத்தையில் சம்பவம்

**ஏ.எஸ்.எம். ஜாவித்**

தினகரன் ஊடகவியலாளர் அஷ்ரப் ஏ.சமதின் மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் (22) களவாடப்பட்டுள்ளது. 04

# தென்னிலங்கையிலே அழகான நகரமாக பேருவளையை மாற்றியமைப்பேன்

## முதன்மை வேட்பாளர் அஸாம் பளீல்

**பேருவளை விசேட நிருபர்**



பேருவளை நகரசபை தேர்தலில் இம்முறையும் சுயேச்சை அணியே வெற்றி பெறும் என்று நம்பிக்கை தெரிவித்த சுயேச்சை அணியின் தலைமை வேட்பாளர் அஸாம் பளீல், பேருவளை நகர மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்து, தென்னிலங்கையிலேயே அழகான நகரமாகவும் அபிவிருத்தியடைந்த பிரதேசமாகவும் மாற்றியமைப்பேன் என தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் பேருவளை நகர சபைக்கு முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம்.பளீல் ஹாஜியாரின் புதல்வரும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் இளைய சகோதரருமான அஸாம் பளீல் சுயேச்சை அணி சார்பில் தலைமை வேட்பாளராக போட்டியிடுகிறார்.

வேட்பு மனு தாக்கல் செய்தபின் ஆதரவாளர்கள் மத்தியில் பேசும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது; பேருவளை நகர சபை பகுதியில் தொடர்ந்தும் பல குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. அதற்காக வேண்டி நான் நான்கு ஆண்டுகள் கொண்ட செயல் திட்டமொன்றை தயாரித்துள்ளேன். நகர மக்களினதும் அரசாங்கத்தினதும் அரச அதிகாரிகளினதும் முழுமையான ஒத்துழைப்புடன் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவேன்.

தூய்மையான அரசியல் மூலம் மக்கள் எதிர் பார்க்கும் சிறப்பான சேவைகளை பேருவளை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதே எனது ஒரே நோக்கமாகும்.

எனது தந்தை மர்ஹூம் பளீல் ஹாஜியார் நேர்மையான, தூய்மையான அரசியல் பணி மூலம் மக்களை சம்பாதித்தார். இன,மத,மொழி,கட்சி பேதமின்றியும் சேவை செய்தார். எனது தந்தையின் வழியில் மக்கள் பணிக்காக இம் முறை தேர்தலில் குதித்துள்ளேன்.

எனது வெற்றிக்கு எனது சகோதரர் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பார். அவரது பன்முகப் படுத்தப்பட்ட நிதியையும் பேருவளை நகர அபிவிருத்திக்கு பயன்படுத்துவேன் என்றார்.


National Lotteries Board — ஞாயிற்றுக்கிழமை 2023.01.22 — www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5008 — ரூ. 15,941,755.00 — ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 5 0 9 6 8 8

மெகா பவர் — 1356 — ரூ. 294,446,202.00 — R 14 — 03 25 34 67 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

கொவிசெத — 3250 — ரூ. 72,850,382.00 — ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 44 64 79 80

தன நிதானய — 1038 — ரூ. 143,313,506.00 — ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 05 07 53 73

ராசி சுப மலர் — சீட்டிழுப்பு இலக்கம் 317 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,541,394.80 — 05 12 31 33

ஜாதிக சம்பத — 1463 — ரூ. 13,554,125.60 — வெற்றி இலக்கங்கள் 6 1 7 5 6 0


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.96 | 258.26 |
| கனடியன் டொலர் | 266.74 | 278.59 |
| யூரோ | 384.81 | 400.37 |
| ஜப்பான் யென் | 2.7043 | 2.8159 |
| சிங்கப்பூர் டொலர் | 268.94 | 280.31 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 436.25 | 452.93 |
| சுவிஸ் பிராங்க் | 387.32 | 406.01 |
| அமெரிக்க டொலர் | 360.47 | 371.36 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 960.78 | கட்டார் ரியால் | 98.82 |
| குவைத் டினார் | 1,183.98 | சவூதி ரியால் | 96.48 |
| ஓமான் ரியால் | 940.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.62 |

## விவசாயிகளுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேற்படி எரிபொருளை நாடளாவிய ரீதியில் உள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன. அதற்காக 122 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு அரை ஏக்கரிலிருந்து இரண்டரை ஏக்கர் வரையிலான பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு உரிய நிலம் கணக்கிடப்பட்டு இலவசமாக எரிபொருள் வழங்கப்பட உள்ளது. அந்த வகையில் ஹெக்டயாரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 15 லீற்றர் டீசல் வழங்கப்படுகிறது.

அதற்குத் தேவையான நிதியை விவசாய அமைச்சு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## துறைசார்ந்த அனைவரும்... (03ஆம் பக்கத் தொடர்)

பேச்சுவார்த்தை யொன்று நேற்றைய தினம் ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இடம்பெற்றுள்ளதுடன் உணவு பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி சுரேன்படகொடகேவின் தலைமையில் அந்த பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

கால்நடைகளுக்கான உணவு, மூலப்பொருட்களுக்கான விலை அதிகரிப்பு, எரிபொருள் நெருக்கடி, போக்குவரத்து சிக்கல்கள், இறக்குமதி செய்யப்படும் விலங்கு உணவு தொடர்பான அந்நிய செலாவணி பிரச்சனை போன்ற பல பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் இந்த பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் கூட்டு இணக்கப்பாட்டுடன் செயற்பட்டால் இந்த துறையில் காணப்படும் பெரும்பாலான பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசர் கலாநிதி சுரேன் படகொடகே இதன் போது தெரிவித்துள்ளார். அவ்வாறு செயற்பட்டால் முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்திகளின் விலைகளை இலகுவாக தீர்மானிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## இந்தியாவிடமிருந்து.. (03ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ளது. 2023ம் ஆண்டுக்காக பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்களை

வழங்குவதற்காக 45 வீதமான அச்சிடுதல் அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்திலும், மேலும் 55 வீதமான பாடப்புத்தகங்கள் தனியார் அச்சக நிறுவனங்களிலும் அச்சிடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க தகைமை பெற்றுள்ள 22 தனியார் அச்சக நிறுவனங்கள்கேள்விப்பத்திரம் தாக்கல் செய்து அதற்கான உடன்படிக்கையிலும்கை ச்சாத்திட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சரின் முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, 20 வீத

முற்பணமும் தனியார் அச்சக நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அம் முற்பணத்தில் 50 வீதம் கடந்த வருடத்திற்கான ஒதுக்கீடுகளிலிருந்து கோரப்பட்டுள்ளதுடன். அதனை அந்த அச்சக நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு உரிய காலத்தில் பாடப் புத்தகங்களை வழங்குவது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கல்வியமைச்சு மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அரச ஊழியர்களது...

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய; நிறைவேற்று அதிகாரிகளின் சம்பளத்தை 25 அல்லது 26 ஆம் திகதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் நிலையில் நிறைவேற்று அதிகாரிகளல்லாத ஊழியர்களின் சம்பளம் ஜனவரி 25 ஆம் திகதி வழங்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

அதற்கான நடவடிக்கைகளை நிதியமைச்சு மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரச சேவையில்...

எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த காலப்பகுதியில் இடமாற்றங்கள் செய்யப்பட வேண்டுமாயின் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்து அன் அனுமதியுடன் மட்டுமே இடமாற்றம் செய்ய முடியும்.

தேர்தல் தொடர்பில் சகல சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முடியும் வரையில் இந்த சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

## லிற்றோ Gas இன் விலைகள்...

திருத்தம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் என்றும், உலக சந்தையில் ஏற்படும் விலை உயர்வுக்கு ஏற்ப முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 201 ரூபாவால் குறைக்கப்பட்டு தற்போது 4,409 ரூபாவுக்கு விற்பனைசெய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் 5 கிலோ நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 80 ரூபாவால் குறைக்கப்பட்டு 1,870 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை, 2.3 கிலோ எடை கொண்ட சிலிண்டர் 38 ரூபாவால் குறைக்கப்பட்டு 822 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் கட்சிகள்,... (03ஆம் பக்கத் தொடர்)

17 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. மாத்தறை மாநகர சபை, வெலிகம நகர சபை ஆகியவற்றோடு ஏனைய அனைத்தும் பிரதேச சபைகளாகும்.

வெலிகம நகரசபைக்கு 18 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக இம்முறை நான்கு அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் போட்டியிடுகின்றன. ஐ.தே. கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) மற்றும் சுதந்திர மக்கள் முன்னணி ஆகிய அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுவொன்றும் வெலிகம நகரசபைக்கு போட்டியிடுகின்றது.

வெலிகம நகரசபைத் எல்லைக்குள் 11 வட்டாரங்கள் உள்ளன. தெரிவு செய்யப்படும் 18 உறுப்பினர்கள் 07 உறுப்பினர்கள் நியமன உறுப்பினர்காளாக தெரிவுசெய்யப்படுவர்.

## இந்தியாவை சித்தரித்து... (03ஆம் பக்கத் தொடர்)

யாழ் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை (21) குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம் மற்றும் 74ஆவது குடியரசு தினம் ஆகியவற்றை முன்னிட்டு 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்' என்ற கருப்பொருளின் கீழ், இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன் போது யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், உள்ளிட்ட இந்திய துணைத்தூதரக அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார சேவை ஊழியர்கள்... (03ஆம் பக்கத் தொடர்)

ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. பணவீக்கம், போக்குவரத்து கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளுதல், மருந்துத்

தட்டுப்பாட்டுக்குத் தீர்வு, சுகாதார சேவையை தனியார் மயப்படுத்தும்

திட்டம் அதிகரித்துள்ள வங்கி வட்டி வீதத்தை குறைத்தல், பாரிய ஊழியர்

பற்றாக்குறைக்கு தீர்வுகாணல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே மேற்படி வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட நாடளாவிய அனைத்து அரசாங்கம் வைத்தியசாலைகளிலும் நோயாளிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## ஊடகவியலாளர்... (03ஆம் பக்கத் தொடர்)

வெள்ளவத்தை பீச்ரோட்டில் நிறுத்திவிட்டு ரியோ ஐஸ்கிறீம் கடையில் ஐஸ்கிறீம் பெற்றுக் கொண்டு திரும்புகையில் அவரது மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடத்தில் இல்லாதிருந்தது. WP BIC 8647 இலக்கமுடைய 150 சிசி கறுப்பு நிற பல்சர் மோட்டார் சைக்கிளே திருடப்பட்டுள்ளது. அப்பகுதியில் தேடிப்பார்த்தபோது மோட்டார் சைக்கிள் காணப்படவில்லை. உடனடியாக அவர் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை செய்து விட்டு பொலிஸாருடன் குறித்த பகுதியில் உள்ள ஒருசில சிசிடி கமராவில் பார்த்தபோது இரண்டு நபர்கள் முகங்களை மூடியபடி மோட்டார் சைக்கிளை தள்ளிக் கொண்டு செல்வதும் இடையில் நிறுத்தி ஏதோ செய்வதையும் காணக்கூடியதாக இருந்தது.

இது தொடர்பாக பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் தேடுதல் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக வெ ள்ளவத்தை பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## A/L பரீட்சார்த்திகளுக்கு...

சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா வலியுறுத்தியுள்ளார். ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களின் இணக்கப்பாட்டுடனேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

## தேயிலை ஏற்றுமதி...

அதிகூடிய வருவாய் இது என தேயிலை ஏற்றுமதி தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

2021ஆம் ஆண்டு தேயிலை ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில் 147.74 பில்லியன் ரூபா அதிகம் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இலங்கை தேயிலையை அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடாக ஈராக்கே காணப்படுகிறது.

ரஷ்யா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் இலங்கை தேயிலையை இறக்குமதி செய்வதில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

## தேர்தலை பிற்போடும்...

சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது கட்சி சில இடங்களில் தனித்தும், சில இடங்களில் கூட்டணியாகவும் போட்டியிடுவது தொடர்பில் விமர்சனங்கள் வெளிவருகின்றன.

அந்த விமர்சனங்களுக்கெல்லாம் நாம் பதிலளித்து நேரத்தை வீணாக்கக்கூடாது. தேர்தல் வெற்றி தொடர்பிலேயே நாம் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.

மக்கள் மத்தியில் பிரசாரங்களை உரிய வகையில் முன்னெடுங்கள்.

இதற்கமைய வன்முறைகள் தலைதூக்கும் செயல்களுக்கு ஆதரவு வழங்காதீர்கள்.

வன்முறையாளர்களைச் சமூகத்தில் இருந்து நாம் ஒதுக்கிவைக்க வேண்டும்.

ஜனநாயகவாதிகளுக்கு இந்த நாட்டில் என்றும் மதிப்பு இருக்கும் என தெரிவித்துள்ளார்.

## கொழும்பு பங்குச் சந்தை... (03ஆம் பக்கத் தொடர்)

பங்குச் சந்தையின் செயல்பாடு உயர்ந்துள்ளது. அனைத்து பங்குகளினதும் விலைச்சுட்டி 272.64 அலகு, 3.13% ஆல் அதிகரித்ததோடு S&P SL விலைச்சுட்டி 108.15 அலகு 3.97% ஆல் அதிகரித்தது. விற்பனை ஆதாயம் 2090 மில்லியன் வரை அதிகரித்ததோடு இந்தியா மற்றும் சீனா கடன் மீள் கட்டமைப்பை செய்வதற்கு விருப்பம் தெரிவித்ததன் காரணமாக பங்குச் சந்தையில் ஏற்பட்ட மாற்றத்தினால் பங்குச்சந்தை நிலையான தன்மைக்கு உள்ளாகியுள்ளது என்பது முதலீட்டாளர்கள் நம்பிக்கையாகும்.

## க.பொ.த. உயர்தர... (03ஆம் பக்கத் தொடர்)

வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளதாகவும் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள மரண தண்டனை கைதி ஒருவரும் இம்முறை பரீட்சைக்கு தோற்றியுள்ளதுடன் அவர் விளக்கமறியலை அனுபவித்துவரும் காலத்தில் சிறுகதைகளையும் எழுதியுள்ளதாக

குறிப்பிட்டார். அவர்கள் வெலிக்கடை மெகசின் சிறைச்சாலை பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தோற்றி வருவதாக தெரிவித்த அவர், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களும் இம்முறை பரீட்சைக்கு தோற்றியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விரைவாக பெற்றுக் கொடுக்க... (03ஆம் பக்கத் தொடர்)

இதன்போதே. அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நிர்மாணத்துறைக் கைத்தொழிலாளர்களை பாதுகாக்கத் தவறினால் எதிர்வரும் இரண்டு, மூன்று வருடங்களில் பெரும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கிணங்க, நிர்மாணத்துறை கைத்தொழில் நிறுவனங்களுக்கு நிலுவையாக

வழங்கப்படவேண்டிய தொகையை விரைவாக கட்டங்கட்டமாக வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அரசியலமைப்பு பேரவை ...

கலாநிதி தினேஷ் சமரரத்ன ஆகியோர் அரசியலமைப்பு சபையின் சிவில் பிரதிநிதிகளாக மூவரும் கடந்த வாரம் நியமிக்கப்பட்டனர். ஆனால் பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனைய எதிர்க் கட்சிகளின் பிரதிநிதிகள் அரசியலமைப்பு சபைக்கு இதுவரை நியமிக்கப்படவில்லை.

எனினும், இந்த விடயமானது அரசியலமைப்பு பேரவை கூட்டத்திற்கு இடையூறை ஏற்படுத்தாது என பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இரண்டு ரூபா...

அச்சிடப்பட்டுள்ளது. அதன் பின்புறம் வெள்ளை நிறத்தில் இருக்கிறது. இலங்கை சுதந்திர முத்திரை ஆர்வலர்கள் சங்க உறுப்பினர் எஸ். என். ஜாக்சன், பழைய நாணயத்தாள்களின் ஏலத்தில் இந்த வகை நாணயத்தாள்களுக்கு அதிக கிராக்கி இருப்பதாக தெரிவித்துள்ளார்.

## தேர்தல் சட்டங்களை...

வாட்ஸ்அப் மூலமாகவும், மின்னஞ்சல் மற்றும் முகநூல் மூலமாகவும் தெரிவிக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இராஜகிரிய தேர்தல் செயலகத்தின் இரண்டாவது மாடியில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்துடன் தொடர்பு கொள்ள 011 2860056, 011 2860059, 011 2860069 தொலைபேசி இலக்கங்கள் தொலைபேசி இலக்கங்களை பயன்படுத்த முடியும்.

அல்லது, பெக்ஸ் இலக்கங்கள் – 011 2860057, 011 2860062, வைபர்/ வாட்ஸ் அப் – 0719160000,இமெயில்– electionedr@gmail.com மற்றும் பேஸ்புக் – *Election Commission of Sri Lanka, Tell Commission – Election Commission of Sri Lanka* முதலானவற்றையும் பயன்படுத்த முடியும்.

## இலங்கையிலிருந்து...

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். இதனால் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் இலங்கையில் இருந்து 212 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடிக்கு அகதிகளாக வந்துள்ளனர்.

இந்நிலையில் இலங்கை கிளிநொச்சி மாவட்டம் பாரதிபுரத்தைச் சேர்ந்த பாரதி டிஸ், அவரது தாய் முனியம்மா, அவரது இரண்டு மகன்கள் ஒரு மகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் திங்கட்கிழமை அதிகாலை ராமேஸ்வரம் அடுத்துள்ள தனுஷ்கோடி கடற்கரைக்கு வந்துள்ளனர்.

இதையடுத்து தகவலறிந்த ராமேஸ்வரம் மரைன் பொலிசார், இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணைக்கு பின்னர் மண்டபம் முகாமில் அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுக்கப்பட்டது.

## உள்ளூராட்சி...

குழுவில் ஒற்றுமையில்லாத நிலையே காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையிலேயே கண்டிப்பாக வர்த்தமானிப் பத்திரத்தை வெளியிடவேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் தொடர்பான வர்த்தமானியில் தேர்தல் ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்களும் பெயரிட்டுள்ளனர்.

எனினும் தேர்தலுக்கான திகதியை தெரிவிக்கும் வர்த்தமானியை வெளியிடுவதிலும் அவ்வாறான நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்தை தீர்மானிப்பது போன்ற முக்கியமான செயற்பாடுகளில் முழுமையான ஆணைக்குழு செயற்படவேண்டும் என குறிப்பிட்டுள்ள கலாநிதி மஹாநாமஹேவா, தேர்தல் நடத்தப்படும் தினத்தை வர்த்தமானி மூலம் தெரிவிக்காமல் வேறுவிதமாக எவ்வாறு அறிவிக்க முடியும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

## தேர்தல் செலவுகள்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி சட்டமூலம் பாராளுமன்ற விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்பட்டு அதனை முறையாத தயாரிக்கும் வகையில் சட்டமா அதிபர் மற்றும் நீதி சட்டவரைஞர் திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். அதற்கிணங்க சட்டமூலம் முறையாக தயாரிக்கப்பட்டு பின்னர் இந்த வாரத்திற்குள் அது தமக்குக் கிடைக்கும் என தெரிவித்துள்ள சபாநாயகர், அது கிடைத்ததும் அதனை உறுதிப்படுத்தும் சான்று தம்மால் வழங்கப்படும் என்றும்

அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய குறித்த சட்டமூலமானது சபாநாயகர் அதனை சான்றுபடுத்தி கையெழுத்திட்ட பின்னரே நடைமுறைக்கு வரும் என்பதையும் சபாநாயகர் தெளிவுபடுத்தியுள்ளார்.

## தமிழரசுக் கட்சி...

மூலமாகவே மக்களுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்களின் பிரச்சினைகள், அரசியல் தீர்வு, காணாமல் போனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு கூட்டாக பல்வேறு உறுதி மொழிகளை மக்களுக்கு வழங்கியது.

மக்கள் மத்தியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்கும் என்று நம்பி இருந்தார்கள். தற்போது கூட்டமைப்பே பிளவுபட்டு காணப்படுகிறது. இது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

காரணம், தமிழரசுக் கட்சி என்பது ஒரு தாய்க்கட்சியாகும். கட்சி இது தொடர்பில் உணர்ந்து செயற்பட்டிருக்க வேண்டும். மக்கள் எங்களை நம்பியிருக்கிறார்கள்.

சிறியதொரு தேர்தல் ஒன்றுக்காக அவர்கள் பிரிந்து செல்வது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

மக்களின் நம்பிக்கையை தமிழரசு கட்சி இல்லாது செய்துள்ளது. மக்களை புறக்கணித்து பிரிந்து செயற்படுவது தவறானதாகும்.

கூட்டமைப்பில் இருந்து விலகி தனித்து போட்டியிடும்போது எங்களுக்குள் கருத்து முரண்பாடுகள் உருவாகலாம். பிரசாரக் கூட்டங்களின்போது வேட்பாளர்கள் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக கூட்டமைப்பை விமர்சித்துப் பேசலாம்.

இவ்வாறு நடக்கும்போது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தும். வெறுப்பு நிலையை உருவாக்கும். அது மக்களின் கோபத்தை தூண்டும் செயற்பாடாக அமையும்.

இருப்பினும், எதிர்காலத்தில் மக்கள் மத்தியில் வாக்கு கேட்டு செல்லும்போது சம்பந்தனையோ அல்லது சுமந்திரனையோ விமர்சித்து வாக்குகளை கேட்கப்போவதில்லை.

தனிப்பட்ட நபரை வைத்து அரசியலில் நடத்தவேண்டிய தேவை எமக்கு கிடையாது என்றார்.

## கல்வி பொதுத் தராதர...

511 பேர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,பரீட்சை நிலையங்களுக்குள் பிரவேசிக்கும் மாணவர்கள் அடையாள அட்டை பரீட்சை எழுதுவதற்கான பேனா மற்றும் பென்சில்களுக்கு மேலதிகமாக வேறு எந்த பொருட்களையும் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

எவராவது ஒரு பரீட்சார்த்தி பரீட்சை சட்டங்களை மீறி செய்யப்படுவாரானால் அவருக்கு ஐந்து வருடங்களுக்கு அல்லது வாழ்க்கை முழுவதும் பரீட்சைகளுக்கு தடை விதிக்கப்படும். உயர்தர பரீட்சையையொட்டி பரீட்சை நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பரீட்சை நடைபெறும் தினங்களில் நாடளாவிய ரீதியில் அனைத்து பொலிஸ் நிலையங்கள் மூலம் செயற்படுத்தப்படும் நடமாடும் பொலிஸ் சேவை, மோட்டார் சைக்கிள் மற்றும் கால்நடையான விசேட பாதுகாப்பு சேவைகளையும் பொலிசார் முன்னெடுக்கவுள்ளனர்.

அத்துடன் பரீட்சை நிலையங்களில் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறுமா உரிய பாதுகாப்பு சேவைகளை முன்னெடுக்குமாறும் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது. அதேவேளை, பரீட்சாத்திகள் உரிய நேரத்திற்கு முன்பதாகவே பரீட்சை நிலையத்திற்கு சமூகமளிக்குமாறும்

இறுக்கமற்ற மனநிலையுடன் பரீட்சைக்கு முகம் கொடுக்கும் போது வெற்றியடைய முடியும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## பொதுப் பயன்பாட்டு...

ஆணைக்குழுவின் அதிகாரிகள் அங்கு உள்ளனர் என எவ்வாறு அவர்கள் தெரிந்துகொண்டனர் என்பதை ஆராயுமாறு ஆணைக்குழுவின் அங்கத்தினர்கள் இருவர் நிதியமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித்தலைவர் உதேனி விக்கிரமசிங்க மற்றும் அதன் உறுப்பினரான பேராசிரியர் மொஹான் சமரநாயக்க ஆகியோரே மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் என தெரிவிக்கும் தரப்பினர் தமக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியதாக இந்த இரு உறுப்பினர்களும் கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி சென். மைக்கல் வீதியில் அமைந்துள்ள மேற்படி கட்டடத்திற்குள் சிலர் பிரவேசித்து பொது பயன்பாட்டு ஆணைக்குழு மேற்கொண்ட தீர்மானம் தொடர்பில் கேள்வியெழுப்பினதுடன் அச்சுறுத்தலையும் மேற்கொண்டுள்ளனர்.

அந்த சமயம் சில ஊடகவியலாளர்களும்கூட அவர்கள் அச்சுறுத்தல் செய்த விதத்தை நேரில் கண்டனர் என ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர்.

அன்றைய தினம் தாம் அங்கு வருவது தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் மட்டுமே தெரிந்து வைத்திருந்தனர்.

அவ்வாறானால் அந்தத் தகவல் சிவில் செயற்பாட்டாளர்கள் எனத் தெரிவிக்கும் தரப்பினருக்கு எவ்வாறு சென்றது? அவர்கள் ஊடகவியலாளர்களையும் அழைத்துக்கொண்டு அங்கு எவ்வாறு பிரவேசித்தனர் என்பதை ஆராயுமாறு ,முறைப்பாட்டாளர்கள் முறைப்பாட்டை செய்துள்ளனர்.

உடனடியாக அதுதொடர்பில் விசாரணைசெய்து உண்மைநிலையை கண்டறியுமாறு அந்த உறுப்பினர்கள் இருவரும் பொலிஸாருக்கும் நிதியமைச்சுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பிக்பொஸ் நிகழ்ச்சியில்...

21 போட்டியாளர்களுடன் ஆரம்பித்த பிக்பொஸ் நிகழ்ச்சி, நேற்று 106வது நாளில் முடிவு பெற்றது. இதில் மூன்று போட்டியாளர்கள் இறுதிப்போட்டிக்கு தெரிவானர்.

இதில் ஷிவின் இரண்டாவது ரன்னராக வந்த நிலையில், விக்ரமன் முதல் ரன்னராக வந்துள்ளார். அசீம் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டு, கிண்ணத்தையும் வென்றார்.

மேலும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து போட்டியாளர்களுக்கும் பதக்கங்கள் கொடுக்கப்பட்டன.

இந்த பிக்பொஸ் சீசன் 6ல் அனைத்து நிகழ்வுகளுமே மிகவும் வித்தியாசமாக நடைபெற்றதுடன், வெற்றி மேடையில் மூன்று போட்டியாளர்களையும் பிக்பொஸ் கொண்டு வந்து நிறுத்தினார்.

வெற்றியை அறிக்க கமலின் தாமதம், போட்டியாளர்கள் இருவரின் இதயத்துடிப்பை தாறுமாறாக எகிறச் செய்துள்ளது. முதல் இடத்தைப்பிடித்து வெற்றி பெற்ற அசீமிற்கு 50 லட்சம் பணம் மற்றும் கார் மற்றும் பிக்பொஸ் ட்ராஃபி கொடுக்கப்பட்டது.

இந்த சீசனில் கமல்ஹாசன் உள்ளே இருந்த 3 போட்டியாளர்கள் தனது கைப்பட எழுதிய கடிதத்தினை பிரேம் போட்டு போட்டியாளர்களுக்கு தனது பரிசாக கொடுத்து வாயடைக்க வைத்துள்ளார்.

# கைத்தொழில்

- சபா. ஸ்ரீ





# சர்வதேச சந்தையில் இலங்கை 'Oud Oil' வல்லப்பட்டை எண்ணெய் உற்பத்தி

சர்வதேச சந்தையில் ஆடம்பரப் பொருட்களில், அகாவூட் எண்ணெய்க்கான அபரிமிதமான கேள்வி நிலவுகிறது. அகாவூட் வகையில் இலங்கைக்கு மாத்திரம் உரித்தான 'வல்லபட்டைக்கு மத்தியக் கிழக்கு நாடுகளில் அதிக கேள்வி நிலவுவதோடு தங்கத்தை விட பெறுமதியானதாகக் கருதப்படுகின்றது. 2020ம் வருடம் சர்வதேச சந்தையில் அகாவூட் எண்ணெய்க்கான மொத்த விலை 136.5 மில்லியன் டொலர் பெறுமதியானதாக இருந்தது. 2026ம் வருடம் இது 166.5 மில்லியன் டொலராக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த எண்ணெய் ஏற்றுமதி கைத்தொழில் துறை எமது நாட்டுக்கு டொலர் வருமானத்தை ஈட்டித்தரும் புதிய கைதொழில் துறையாக கருதப்படுகிறது. இந்த எண்ணெய்க்கு மத்திய கிழக்கு நாடுகளில் பெருமளவு வரவேற்பு இருக்கிறது. அகாவூட் பழங்காலத்திலிருந்தே உலகின் மிக விலையுயர்ந்த மற்றும் மதிப்புமிக்க தாவரங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது. ஏனென்றால், அகாவூட் ஒரு தனித்துவமான வாசனையைக் கொண்டுள்ளது மற்றும் இந்த அகர்வுட் இனங்களில் மிகவும் அரிதானது. அரிதான மற்றும் மிகவும் மணம் கொண்ட இனங்களில் ஒன்றான Gyrinops walla, இலங்கையை பூர்வீகமாகக் கொண்டது. இந்த அரிய வகை அகாவூட் தொழிலில் அதன் சரியான இடத்தை தக்கவைத்துக்கொள்வதை உறுதி செய்வதில் பின்தன்ன பிளான்டேஷன் முன்னிலை வகிக்கிறது.

தேசபந்து குமார்தர்மசேன. அவரை நாம் கிரிக்கெட் வீரராகவே அறிவோம். அத்தோடு எமது கிரிக்கெட் துறையில் சர்வதேச நடுவராக பணியாற்றுவதோடு நம் நாட்டுக்கு சர்வதேச புகழையும் ஈட்டித் தந்தவர். அதோடு நின்று விடாமல் இன்று நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்குடிக்கு அவரால் முயன்ற தீர்வையும் பெற்றுக் கொடுத்துள்ளார். 1999 ஆம் ஆண்டு குமார்தர்மசேனவால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமே பின்தன்ன பிளான்டேஷனாகும்.நாம் நன்றாக அறிந்தது பெருந்தோட்ட கைத்தொழில் துறையில் தேயிலை, இறப்பராகும். ஆனால் இது மிகவும் வேறுப்பட்டதாகும். 2009 ஆம் ஆண்டு குமார்தர்மசேனவின் இந்திய நண்பர் ஒருவர் கொடுத்த அகர்வுட் விதையில் பயிரிடலை ஆரம்பித்து அதில் கிடைத்த அனுபவங்கள் மற்றும் இந்திய நண்பரின் அனுபவங்களை ஒன்றாக திரட்டி அமைக்கப்பட்ட நிறுவனமே பின்தன்ன பிளாண்டேசன் ஆகும்.2020 கொவிட் தொற்று காலத்தில் 20 ஊழியர்களுடன் ஆரம்பமான இக் கைத்தொழில் துறையில் பெற்றுக் கொண்ட அனுபவத்தில் இன்று 300 க்கு மேற்பட்ட தொழிலாளர் வேலை செய்கின்றனர். அத்தோடு 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி இரத்தினபுரி அயகமவில் அமைந்துள்ள பிளாண்டேஷனில் 'wood oil' தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு இன்று பல் கூட்டு தொழில் துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. 45 வெசல்ஸ் இயந்திரங்களுடன் தொடங்கி இன்று 109 வெசல்ஸ் இயந்திரங்களுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் பயிர் செய்கைத் துறையில் பரம்பரை அனுபவத்தோடும் நீண்ட கால ஆய்வு மற்றும் பரிசோதனைகளின் ஊடாகப் பெற்றுக்கொண்ட அனுபவங்களோடு அகாவூட் துறையில் இலங்கையில் முதன்மையானவரான தேசபந்து குமார் தர்மசேன இலங்கையில் மட்டுமன்றி இலங்கைக்கு வெளியில் சர்வதேசத்திலும் கால்பதித்துள்ளார். அகாவூட் மரங்களை நடுதல் மற்றும் அதிலிருந்து உற்பத்திகளை மேற்கொள்ளல் என்ற வகையில் அகாவூட் விதை முதல் அதிலிருந்து வாசனை எண்ணெய்யை உற்பத்தி செய்தல் என்ற அளவுக்கு பின்தன்ன நிறுவனத்தின் தொழிற்சாலை கட்டமைக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுக் காலம் தொட்டு உலகத்தில் மிகப் பெறுமதியான விலையுயர்ந்த மரங்களில் ஒன்றாக அகாவூட் மரம் கருதப்படுகின்றது. அதிலிருந்து கிடைக்கின்ற அற்புதமான நறுமணம் மற்றும் அதன் அரிதான தன்மை என்பனவே அதற்குரிய காரணமாகும். அனைத்து அகாவூட் மரங்களிலிருந்தும் இந்த அற்புதமான நறுமணத்தைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. அந்த நறுமணமானது மரத்தில் உருவாகும் ஒருவகையான பசையிலிருந்து பெறப்படுகின்றது. அதிலும் குறிப்பாக கருப்பு நிறப் பட்டைகளில் இப்பசையானது அதிகம் காணப்படுகின்றது. ரம்மியமான இரத்தினபுரி மாவட்டத்தில், அயகம பகுதியில் அமையப்பெற்றுள்ள 'பின்தன்ன' தோட்டத்தில் மொத்த நிலப்பரப்பில் அரைப் பகுதியில் அகாவூட் மரங்கள் நடப்பட்டுள்ளன. இம்மரத்திலிருந்து எண்ணெய், பட்டை, ஊதுபத்தி, ஊத் தேநீர், மருந்து, மற்றும் ஒப்பனைப் பொருட்கள் அத்தோடு ஊத் உப உற்பத்திப் பொருட்கள் என மரத்தின் வேர் முதல் இலை வரையுள்ள அனைத்துப் பகுதிகளையும் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ள பின்தன்ன நிறுவனத்தால் முடியுமாகவுள்ளது.இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு வல்லபட்டை உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான சட்டரீதியான மற்றும் அரச அங்கீகாரத்தைப் பெற்ற ஒரேயொரு நிறுவனம் எமது நிறுவனம் மாத்திரமே. விதையிடல் முதல் டொலரை உழைக்கும் வரையுள்ள நீண்ட செயற்திட்டத்திற்குத் தேவையான அனைத்து விதமான ஏற்பாடுகளையும் ஒழுங்குகளையும் கொண்ட, இலங்கையில் ஊத் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய முதலாவது மற்றும் ஏக தொழிற்சாலையைக் கொண்ட வெற்றிகரமாக முன்னேறிவரும் நிறுவனமாக உள்ளது. சுற்றுச் சூழலை நேசிக்கின்ற, அதற்கு பாதிப்பு ஏற்படுத்தாத மனநிலைக் கொண்ட நிறுவனத்தின் தலைவர் தேசபந்து குமார் தர்மசேனவின் எண்ணக் கருவில் தொழிற்சாலைக்குரிய முற்றுமுழுதான மின்சாரம் சூரிய சக்தியிலிருந்து பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் பயிரிடல் முதல் ஊத் எண்ணெய் உற்பத்தி வரையுள்ள செயற்பாடுகளுக்கு தேவையான நீர் அப்பகுதியிலுள்ள இயற்கை நீர் ஊற்றுக்களிலிருந்தும், சேகரிக்கப்பட்ட மழை நீரிலிருந்துமே பெறப்படுகின்றது. 100 வீதம் இயற்கை முறையிலான

**இலங்கையில் ஊத் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய முதலாவது மற்றும் ஏக தொழிற் சாலை**





**முழுமையான இலங்கை உற்பத்தியிலிருந்து அந்நிய வெலாவணி..**

















**டுபாய், ஓமான், கட்டார், சவூதி அரேபியா, குவைத் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி**

உற்பத்திகளை சந்தைப்படுத்துவதிலும் பின்தன்ன நிறுவனம் முதன்மை ஸ்தானத்தில் இருக்கின்றது. தேசிய பொருளாதார அபிவிருத்திக்குக் கைக்கொடுக்கும் வகையில் இலங்கை உற்பத்தி என்ற வகையில் ஊத் உற்பத்திகளை சர்வதேச சந்தைக்குக் கொண்டு செல்லுகிறது. இலங்கையின் ஊத் உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான முதலாவதும் ஏகமானதுமான வெளிநாட்டு விற்பனை நிலையத்தை இம்மாதம் 28ம் திகதி ஐக்கிய அரபு அமீர் ராஜ்ஜியத்தில் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அத்தோடு ஓமான், கட்டார், சவூதி அரேபியா, குவைத் ஆகிய நாடுகளிலும் சீலானி நாமத்தை உலகறியச் செய்யும் விற்பனை நிலையங்களை திறப்பதற்கான ஆரம்பகட்ட முயற்சிகள் நடைபெற்றுள்ளன. 2023ம் வருடம் சீலானி உற்பத்திகளை சந்தைப்படுத்தவும் அதன் மூலம் நாட்டிற்குத் தேவையான அந்நியச் செலவாணியைப் பெற்றுக்கொள்ளவும், இலங்கைக்கேயுரிய வல்லபட்டை மரத்திற்கு மேலதிக பெறுமானத்தைப் பெற்றுக்கொடுக்கவும் எதிர்காலத்தில் சிறந்த திட்டங்களை முன்வைக்க பின்தன்ன நிறுவனம் முயற்சிக்கும்.

# குடும்பப் பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் சிரட்டைக் கைத்தொழில்...



ஆர்.சுகந்தினி

யுத்தத்தினாலும் சுனாமி உட்பட இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டு கணவனை இழந்து தவிக்கும் இளம் குடும்பப் பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு தன்னால் இயன்ற நிலைபேறானதும் பயனுடையதுமான உதவியைச் செய்ய வேண்டுமெனும் நோக்கில் தேங்காய் சிரட்டைகளைப் பயன்படுத்தி கலைப் பொருட்களைத் தயாரிக்கும் கைத்தொழிலை தான் பழகியதாக, இளம் சுயதொழில் முயற்சியாளரும் வளவாளருமான நிதர்ஷிகா துஷானந் தெரிவித்தார்.

ஏனெனில், இத்தொழிலைத் தொடங்குவதற்குப் பாரியளவில் முதலீடு செய்யத் தேவை இல்லையென்பதுடன், நாளாந்தம் கழிவுப்பொருளாக குப்பையில் வீசும் தேங்காய் சிரட்டைகளே இத்தொழிலுக்கு பிரதான பொருளாகக் காணப்படுகின்றது. ஆகையினால், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பெண்கள் கூட, தமது வீட்டு வேலைகளையும் கவனித்துக்கொண்டு இச்சுயதொழிலில் ஈடுபட்டு வருமானத்தைச் சம்பாதிக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டு தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட 32 வயதுடைய நிதர்ஷிகா, தற்போது தனது வீட்டுத் தாழ்வாரத்தில் வைத்து தேங்காய் சிரட்டைகளைப் பயன்படுத்தி கலைப் பொருட்களைத் தயாரிக்கும் சுயதொழிலில் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றார்.

சிரட்டைகளைப் பயன்படுத்தி கலைப் பொருட்களைத் தயாரிக்கும் சுயதொழிலை கடந்த 2018ஆம் ஆண்டில் நானே சுயமாகப் பழகினேன். ஆரம்பத்தில் எனது சிந்தனையின் மூலமாக ஒவ்வொரு வடிவங்களிலும் தேங்காய் சிரட்டைகளைப் பயன்படுத்தி கலைப் பொருட்களைத் தயாரித்தேன். இவ்வாறிருந்து வருகையில், சிரட்டைகளில் கலைப் பொருட்களைத் தயாரிக்கும் 5 நாட்களைக் கொண்ட பயிற்சிநெறியொன்று, கடந்த 2019ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்ட கச்சேரியில் NEDA எனும் நிறுவனத்தினால் இலவசமாக நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் என்னுடன் சேர்த்து 25 பெண்கள் கலந்துகொண்டனர். இதில் ஆக்கபூர்வமான பயிற்சியை பெற்றுக்கொண்ட நான், அப்பயிற்சியை பூர்த்தி செய்தமைக்கான சான்றிதழையும் பெற்றுக்கொண்டேன்.தற்போது அதை முழுநேரத் தொழிலாகச் செய்து வருகின்றேன்.


அத்துடன், கூலி வேலை செய்து வந்த எனது கணவரை, அக்கூலி வேலை செய்வதிலிருந்து நிறுத்தி, எனது சுயதொழில் நடவடிக்கையில் இணைத்துள்ளேன்" என்கின்றார் அவர்.

துருவிய தேங்காய் சிரட்டைகளைப் பயன்படுத்தி பல்வேறுபட்ட அலங்காரப் பொருட்கள், சமையலறை உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், பரிசுப் பொருட்கள் ஆகியவற்றை தயாரித்து வருகின்றேன்.

இக்கலைப் பொருட்களைத் தயாரிப்பதற்காகத் துருவிய தேங்காய் சிரட்டை, மரப் பலகை, வர்ணப்பூச்சு, வானிஸ், சான்ட்பேப்பர் உள்ளிட்டவற்றை பயன்படுத்துகின்றேன். இவ்வேலைக்காக மிகவும் குறைந்த பணத்தை முதலீடு செய்து, போதியளவான வருமானத்தை சம்பாதிக்கின்றேன். இந்நிலையில், 250 ரூபாவிலிருந்து 5,000 ரூபா வரை இக்கலைப் பொருட்களை நான் விற்பனை செய்து வருகின்றேன்.இந்நிலையில், எனது குடும்ப வாழ்வாதாரத்துக்குத் தேவையான, போதியளவான வருமானத்தை ஈட்டி வருகின்றேன்" என்கின்றார் அவர்.

என்னால் தயார் செய்யப்படும் இக்கலைப் பொருட்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கேள்விகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. எவ்வேளையிலும் இதற்கான ஓடர்கள் வந்தவண்ணமுள்ளன. சிலர் டிசைன்களை என்னிடம் சமர்ப்பித்து அந்த டிசைன்களுக்கு கலைப் பொருட்களைத் தயாரித்துத் தருமாறு கேட்கின்றனர்.










தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் தை மாதம் 10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 30

### குறள் தரும் சிந்தனை



பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது

நல்ல பண்பு இல்லாதவர்கள் அன்பு வெள்ளத்தில் நம்மை மூழ்கடிப்பதுபோல் தோன்றினாலும் அவர்களது நட்பை, மேலும் வளர்த்துக் கொள்ளாமல் குறைத்துக் கொள்வதே நல்லது.

## மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டிய காலமிது

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதித்தினம் கடந்த 21 ஆம் திகதி அமைந்திருந்ததோடு எதிர்வரும் மார்ச் மாதம் 09 ஆம் திகதி தேர்தலுக்கான தினமாக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டும் உள்ளன.

இத்தேர்தலை நீதியாகவும் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

இதேவேளை தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபடும் நிறுவனங்களும் அதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளன.

இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுக்களை சமர்ப்பித்துள்ள பிரதான அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அரசியல் கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் வட்டார மட்டத்தில் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான தயார்படுத்தல்களையும் மேற்கொண்டுள்ளன.

என்றாலும் 2018 ஆம் ஆண்டில் போன்று இம்முறையும் வட்டார மற்றும் விகிதாசார முறைமைகளை உள்ளடக்கிய கலப்பு தேர்தல் முறைமைப்படி இத்தேர்தலை நடாத்துவதற்கு வேட்பு மனு கோரப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இத்தேர்தல் முறைமையில் சில பலவீனங்களும குறைபாடுகளும் காணப்படுவதாகவும் அவை நிவர்த்திக்கப்பட வேண்டும் என்றும் ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் முன்னொரு போதும் முகம் கொடுத்திராத பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி மீட்சி பெற்று வரும் வேளையில் தான் இந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கான காலமும் வந்திருக்கின்றது. தேர்தல் என்பது அதிக செலவு மிக்க செயற்பாடாகும். தற்போதைய சூழலில் இத்தேர்தல் நடாத்தப்படும் போது அதற்கென பெருந்தொகை நிதியைச் செலவிட நேரிடும். அவ்வாறான நிதிச் செலவை மேற்கொள்ளக்கூடிய நிலையில் நாடு இல்லை. அது தான் நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து தரப்பினரதும் கருத்தாக உள்ளது.

தீவிர பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்றுவரும் சூழலில் தேர்தலொன்றுக்காகப் பெருந்தொகை நிதிச் செலவை மேற்கொள்ளும் போது நாடு மீண்டும் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படலாம் என்பது தான் பொருளாதார நிபுணர்களின் அபிப்பிராயமாக உள்ளது.

இருந்த போதிலும் பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதில் குறியாக நிற்கின்றன. அக்கட்சிகள் நாட்டினதோ மக்களினதோ நலன்களைக் கருத்தில் கொண்டு இவ்வாறான நிலையை எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் இத்தேர்தலில் போட்டியிடவென கட்டுப்பணத்தைச் செலுத்திய பல சுயேட்சைக் குழுக்களும் சில அரசியல் கட்சிகளும் வேட்பு மனுக்களைச் சமர்ப்பிப்பதைத் தவிர்த்துக் கொண்டுள்ளன. அதேநேரம் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் நூற்றுக்கும் மேற்பட்ட வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பெருந்தொகை வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதும் கட்டுப்பணத்தைச் செலுத்தி வேட்பு மனுவைச் சமர்ப்பிக்காமையும் இம்முறை தான் பெருமளவில் இடம்பெற்று இருக்கின்றது. இவ்வாறான நிலைமை கடந்த காலத்தில் நடாத்தப்பட்ட தேர்தல்களுக்கான வேட்பு மனுக்களின் போது இடம்பெறவில்லை. அதனால் இது பல தரப்பினரதும் அவதானத்தைப் பெற்ற விடயமாக விளங்குகிறது.

தற்போது நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி சூழலில் இத்தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே ஒரு சாரார் கட்டுப்பணத்தைச் செலுத்தியும் வேட்பு மனுவை சமர்ப்பிக்காது தவிர்த்து இருக்கலாம். மற்றொரு சாரார் வேட்பு மனுவை சமர்ப்பித்தும் அது நிராகரிக்கப்படக்கூடிய வகையில் செயற்பட்டிருக்கலாம் என்றவாறான கருத்துக்களும் நிலவவே செய்கின்றன.

தற்போதைய சூழலில் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மீண்டும் முகம் கொடுக்கக்கூடிய நிலையில் நாடு இல்லை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதனால் அதிக செலவை ஏற்படுத்தக்கூடிய உள்ளூராட்சி தேர்தலை நடாத்தும் போது பொருளாதார நிபுணர்கள் குறிப்பிட்டிருப்பது போன்று மீண்டும் பொருளாதார நெருக்கடி தீவிரமடைவதைத் தவிர்க்க முடியாததாகி விடும்.

அதன் காரணத்தினால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி முடிவுகளையும் தீர்மானங்களையும் எடுக்க வேண்டிய நேர காலமிது. இதைவிடுத்து அற்ப அரசியல் நலன்களை இலக்காகக் கொண்டு செயற்படும் போது நாடும் மக்களும் தான் நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுப்பர்.

editor.tkn@lakehouse.lk

# பெற்றோரின் கரங்களில் சிறுவர்களின் எதிர்காலம்

எதிர்கால சரித்திரத்தையே தங்களின் திறமையால் மாற்றியமைக்கும் வல்லமை படைத்தவர்களாகக் கருதப்படும் இன்றைய சிறுவர்களின் எதிர்காலம், கேள்விக்குறியாகி வருகின்றமை அனைவரும் அறிந்ததேயாகும்.

மிகுந்த பராமரிப்புடன் கண்ணும் கருத்துமாகப் பிள்ளைகளைப் பெற்றோர் வளர்த்தெடுத்த காலம் போய், அவர்கள் பெரும் செல்வத்தை தேடி அலையும் நிலைமை உருவாகியுள்ள இதே சூழலில் இன்னோர் தொகைப் பெற்றோர் தீய பழக்கவழக்கமான ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி தமது பிள்ளைகளின் எதிர்காலத்தையே தொலைத்து விடுகின்றனர். இந்த நிலையில் பிள்ளைகளின் அன்பு அரவணைப்பு உள்ளிட்ட எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியாத நிலைக்கு பெற்றோர் உள்ளாகின்றனர். அத்தோடு யாதுமறியா அப்பாவி சிறுவர்கள் குருத்துகளாக இருக்கும் போதே கிள்ளி எறியப்படக்கூடிய துர்ப்பாக்கிய நிலைக்கும் முகம் கொடுக்கின்றனர்.

பிள்ளைகளானவர்கள் தமது பெற்றோரில் தங்கி வாழும் நிலைமை இயற்கையாக இருந்து வருகிறது. அவர்களின் வழிகாட்டியாகவும் பெற்றோரே இருந்து வருகின்றனர். ஆகையால், சிறுவர்களானவர்கள் அன்பினாலும் பண்பினாலும் பெற்றோரினால் அரவணைக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட வேண்டியவர்களாவர்.

அத்துடன், தமது பெற்றோர் அல்லது தம்மை விட வயதில் கூடியவர்கள் எதனைச் செய்கின்றனரோ, அதனைப் பின்பற்றி நடப்பவர்களாக சிறுவர்கள் இருக்கின்றனர். ஆகையால், பிள்ளைகளுக்கு அருகில் குறைந்தபட்சம் அவர்களின் அன்னையாவது நெருங்கியிருந்து அவர்களை உரிய முறையில் வழிநடத்த வேண்டும் என்பதே இயற்கையின் நியதியாகும்.

எமது நாட்டில் தற்போதைய காலகட்டத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு பின்தங்கிய இடங்களிலுள்ள கணவன், மனைவி ஆகிய இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டும் எனும் நோக்கில் கணவன் வேலைக்குச் செல்லும் அதேவேளை, சில மனைவிமார்களும் வேலைவாய்ப்புத் தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்றனர்.

இது இவ்விதமிருக்க, போதைப்பொருள் பாவனைக்கு பெற்றோர் அடிமையாகின்ற துர்ப்பாக்கிய சம்பவங்களும் பின்தங்கிய இடங்களில் காணப்படுகின்றன. இவ்விரு சாராரின் பிள்ளைகளின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு இவ்விரு சம்பவங்களும் பாதகமாக அமைந்து விடுகின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

பெற்றோரின் இவ்விரண்டு நடவடிக்கைகளினாலும், தமது சிறுபிள்ளைப் பிராயத்தையே சிறுவர்கள் இழந்து விடுகின்றனர். பெற்றோரிடமிருந்து கிடைக்க வேண்டிய அன்பையும் அரவணைப்பையும் சிறுவர்கள் இழப்பதுடன், சிறுவயதில் தாம் ஓரங்கட்டப்பட்டவர்களாக மனதளவில் தவிக்கின்றனர். தனிமையில் ஒருவித ஏக்கத்துடன் வாழும் நிலைமைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர். காலப்போக்கில் தனிமையானது அவர்களை விரக்தி நிலைமைக்கு இட்டுச் சென்று உளவியல் தாக்கத்துக்கும் உள்ளாகின்றனர்.

இது மட்டுமன்றி சிறுவர்களின் கல்வி மற்றும் சுகாதாரம் பாதிக்கப்படுவதுடன், அவர்களுக்கு உரிய வேளையில் போஷாக்கான உணவு கிடைக்காமலும் போகின்றன. அவர்களின் தாமாகச் சிந்திக்கும் திறன், அறிவாற்றல் என்பனவும் மழுங்கடிக்கப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் அவர்கள் போதைப்பொருள் பாவனை, புகைத்தல், திருட்டு உள்ளிட்ட தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாவதோடு குற்றச்செயல்களிலும் ஈடுபட எத்தனிப்பவர்களாகவும் உள்ளனர்.



அத்துடன், சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்ற சம்பவங்களும் எமது நாட்டில் மலிந்து காணப்படுகின்றன.

இவ்வாறானவற்றினால் சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்றன. சிறுவர்களின் கல்விக்குத் தடை விதித்தல், ஓடியாடி விளையாடும் சிறுபிள்ளைப் பிராயத்தில் அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாக வேலைகளைச் செய்விக்கத் தூண்டுதல், அவர்களை அநாதரவாக பரிதவிக்க விடுதல், அவர்களைத் தண்டித்தல், பாராபட்சமாக நடத்துதல் உள்ளிட்டவை சிறுவர் துஷ்பிரயோகங்களாகக் கொள்ளப்படுகின்றன.



இச்சிறுவர் துஷ்பிரயோகங்களானவை உடல், உள, உணர்வு ரீதியானதும் புறக்கணிப்பு ரீதியானதுமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகையால் சிறுவர்களை பாதுகாத்து, அவர்களின் உரிமைகளை மதித்து, அவர்களைக் கண்ணியமாக நடத்தி, ஆரோக்கியமானதொரு சிறுவர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோரிடமே உள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்காகச் செல்லும் தாய்மார்கள், தமது பிள்ளைகளை பாட்டி, சகோதரர் உள்ளிட்ட உறவினர்களிடம் ஒப்படைத்து விட்டுச் செல்கின்றனர். இதேவேளை, போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள பெற்றோர், தமது பிள்ளைகளை அநாதரவாக பரிதவிக்க விடும் நிலைமையை எமது நாட்டில் பரவலாக அவதானிக்க முடிகிறது.

பெற்றோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதால், சுமார் 12 ஆயிரம் சிறுவர்கள் அநாதை நிலையங்களில் விடப்பட்டுள்ளதாகவும் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள பெரும்பாலான பெற்றோரின் பிள்ளைகள், தமது பாட்டன் அல்லது பாட்டியுடனையே சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு வரும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாகவும், கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர், வைத்தியர் தீபால் பெரேரா அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, சுற்றுலா வீசாவில் ஓமானுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பெண்கள் பலர் அங்கு அநாதவராகக் கைவிடப்பட்ட சம்பவம் அண்மையில் ஊடகங்கள் வாயிலாக தெரியவந்தது. எனவே, இவ்விரு சாராரின் பிள்ளைகளும் அன்பு, அரவணைப்புக்காக ஏங்கியே தமது காலத்தைக் கழிக்கும் துரதிஷ்டவசமான நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இந்நிலைமை தொடருமாயின் நாட்டின் பொறுப்புகளை ஏற்பதற்குக் கூட ஆரோக்கியமான தலைமுறை இல்லாத நிலைமை ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

பெற்றோரின் உரிய பராமரிப்பின்றி தவிக்கும் சிறுவர்கள் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட மனநல வைத்தியரும் ஒருங்கிணைப்பாளருமான டான் சௌந்தரராஜா தெரிவிக்கையில்,

'சிறுவயதுப் பருவம் என்பது ஒரு பிள்ளையின் 18 வயது வரையே கணிக்கப்படுகின்றது. இவ்வயதினுள் சிறுவர்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்படும் பட்சத்திலேயே அவர்களால் எதிர்காலத்தில் சமூகத்தில் நற்பிரஜைகளாகத் திகழ முடியும் என்பதுடன், அவர்களின் வாழ்க்கையும் சுபீட்சமிக்கதாக அமையும். ஆகையால், இச்சிறுவர்களைப் பொறுப்புடன் கவனிக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும்' என்றார்.

'சிறுவர்கள் தவறான வழியில் செல்லாமலோ அல்லது அவர்கள் தவறிழைக்காமலோ இருப்பதற்கு சிறுவயது முதல் நல்ல பழக்கவழக்கங்களை உதாரணங்கள் மூலம் பெற்றோர் கற்றுக்கொடுக்க வேண்டும். எதிர்காலத்தில் சிறந்த வாழ்க்கைக்குரியவர்களாக அவர்களை மாற்றுவதற்கு சிறுவயது முதல் தயார்படுத்துதல் அவசியமானது.

வாழ்க்கையை சிறந்த முறையில் வாழ்வதற்கான திறன்களை சிறுவர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும். அந்த வகையில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் விதம், அப்பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வை எடுக்கும் மனப்பக்குவம், அவர்களின் வாழ்க்கையில் முன்னேறிச் செல்லும் நடைமுறை, அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான திட்டமிடல் உள்ளிட்டவை தொடர்பில் சிறுவர்களுக்கு மனத் தைரியத்தை பெற்றோரால் மாத்திரமே உரிய முறையில் வழங்க முடியும்.

அத்துடன், சிறுவர்கள் சாதிக்கும் விடயங்களை, அவர்களின் திறமைகளைப் பாராட்டுவதற்கு பெற்றோராலேயே முடியும். அவர்களுக்குரிய வயதில் பாராட்டுதல் கிடைக்கா விட்டாலோ, மகிழ்ச்சியான தருணம் அமையா விட்டாலோ காலப்போக்கில் அவர்கள் மனதளவில் கவலையை உணர்வதுடன், தவறான வழிகளுக்குச் செல்லவும் காரணமாகின்றது.


போதைப்பொருளுக்கு அடிமையாகும் பெற்றோரின் பிள்ளைகளும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை தேடிச் செல்வோரின் பிள்ளைகளும் நாளடைவில் உடல், உள ரீதியாக மெது மெதுவாக பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும். ஏனெனில், இவ்வாறான சிறுவர்கள் மத்தியில் மகிழ்ச்சியான தருணம் என்பது குறைவாகவே காணப்படுகின்றது.

மன அழுத்தத்தினால் பாதிக்கப்படும் சிறுவர்கள் கவலை, யோசனை, தீர்மானம் எடுக்க முடியாமை போன்றவற்றுக்கு ஆளாகின்றனர். உடல் ரீதியாக உடல் மெலிவு, கொழுப்புக் கூடி உடல் பருமன் அதிகரித்தல், உறக்கமின்மை போன்றவற்றுக்கும் அவர்கள் உள்ளாகின்றனர். நாளடைவில் இவ்வாறான சிறுவர்கள் மத்தியில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைதல், நீரிழிவு, இதயநோய், புற்றுநோய் உள்ளிட்டவற்றுக்கும் ஆளாகக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

இவ்வாறிருக்க, இச்சிறுவர்களின் எதிர்மறையான குணாதிசயங்களாகக் கோபம், சண்டை, ஆத்திரமடைதல் உள்ளிட்டவை காணப்படுவதுடன், இவ்வாறான எதிர்மறைக் குணாதிசயங்களின் விளைவால் இச்சிறுவர்கள் அனைவராலும் வெறுத்தொதுக்கப்பட்டு நிந்திக்கப்படும் நிலைமைக்கும் உள்ளாவதோடு அவர்களது நற்பெயரும் பாதிக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது.

ஆகையால், குடும்பமொன்று கட்டமைப்புக்குள் இருந்து தமது பிள்ளைகளுக்கு சமூகத்தில் இருக்கும் நல்லதையும் தீயதையும் வேறுபடுத்திக் காட்ட வேண்டும்' எனவும் அவர் தெரிவித்தார்.

தாங்கிக்கொள்ள எத்தனை உறவுகள் இருந்தாலும், பெற்றோருக்கு இணையாக இந்த உலகில் எந்த உறவும் இல்லை. ஆகவே, பெற்றோராகிய நீங்களே உங்கள் பிள்ளைகளின் வளமுடைய எதிர்காலத்துக்கு பொறுப்பாவீர்கள்.



ஆர்.சுகந்தினி...

# தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள் நூல் வெளியீட்டு விழா





### தொகுப்பு ஆசிரியர்கள் திருமதி சுபா ஷாமினி கந்தசாமி, ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி

திருமதி சுபா ஷாமினி கந்தசாமி நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரியில் 38 வருடங்களுக்கு மேல் சங்கீத ஆசிரியராக கடமையாற்றி நீர்கொழும்பில் இசையை வளர்க்க அயராது உழைத்தவர். ஓய்வுபெற்ற பின் ஸப்தசுர கான கலாலயம் என்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கி வீணை, வயலின், மிருதங்கம், வாய்ப்பாட்டு போன்ற வகுப்புக்களை வைத்து நீர்கொழும்பில் ஒரு இசைப் பரம்பரையை உருவாக்க பாடுபட்டு வருகிறார். நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை பண்ணிசை வகுப்புக்களை இலவசமாக நடத்தி வருகின்றார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சுமார் 20 வருடங்களுக்கு மேல் உறுப்பினராக இருந்து சங்க நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார். இவர் அமரர் திருமதி சரஸ்வதி பாக்கியராஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர், நுண்கலைத்துறை விரிவுரையாளர்) இவரின் பெரியதாயாரும் குருவும் ஆவார். இவரது தாயார் மிருதங்க வித்துவானாக இருந்து சரஸ்வதி பாக்கியராஜாவின் இசைக் கச்சேரிகளுக்கு பக்கவாத்தியம் வாசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி

ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 35 வருடங்களுக்கு மேலாக 7 தடவை பொதுச் செயலாளராகவும், உறுப்பாண்மைச் செயலாளர், கல்விக்குழுச் செயலாளர், இலக்கியக் குழுச்செயலாளர் போன்ற பதவிகளிலும் இருந்து சிறப்பாக பணிசெய்து தமிழுக்கும் தமிழ்ச் சங்க வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருகின்றார். இவர் நீர்கொழும்பிலிருந்து 35 கிலோமீற்றர் தூரம் பிரயாணம் செய்து தமிழ்ச் சங்கத்தில் வந்து பணிசெய்யும் ஒருவர். தமிழ்ச் சங்கத்தின் கட்டிட வளர்ச்சிக்காகவும் இயல், இசை, நாடக நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி தமிழ் வளர்ச்சிக்காகவும் செயலாற்றி வருகிறார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தமிழிசையை வளர்க்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு பேராசிரியர் சபா ஜெயராசாவின் ஆலோசனை, வழிகாட்டலில் தமிழிசை ஆய்வரங்கு, சிறப்புமலர் வெளியீடு, தலைக்கோல் விருது வழங்குதல், தமிழிசைப் போட்டிகளை இலங்கை பூராகவும் மாணவர்களிடையே நடாத்துதல் போன்ற பணிகளை முன்னெடுத்து வருகிறார். அத்தோடு வாக்கியகாரர் வரிசையில் இராக அளிக்கை, தமிழிசை விழா போன்ற பணிகளை முன்னெடுத்த ஒருவர். ஆரம்ப காலத்தில் அமரர் கலாநிதி மீரா வில்லராஜர் அவர்களின் ஒத்துழைப்புடன் செய்த இசை செல்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

தமிழிசையில் மிகுந்த ஈடுபாடு காரணமாக பேராசிரியர் சபா ஜெராசாவின் ஆலோசனைக்கு அமைவாக தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள் என்ற இந்திய, இலங்கை தமிழிசை பாடல்களை உருவாக்கியவர்களின் சிறு குறிப்பும் பாடல்களும் கொண்ட தொகுப்பு நூலை 28.01.2023 சனிக்கிழமை மாலை 04.00 மணிக்கு வெளியிடவுள்ளார். இந்நூல் மாணவர்களுக்கு பெரும் பிரியோசனமாக அமையும் எனலாம்.

பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையிலான இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக கொழும்பு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், சிறப்பு விருந்தினர்களாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச்செயலாளர் வே. கந்தசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறும். தமிழ் வாழ்த்தினை செல்விகளான பிருந்தா ரவிதாஸ், சுபலஷிகா கேசவன் ரெட்டியார், சங்கரிப்ரியா தேவபிரகாசம், கபிலாஷினி நந்தகுமார் ஆகியோர் இசைப்பர். வரவேற்புரையை சட்டத்தரணி திரு.விநோதன் அபயன், தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், வாழ்த்துரையினை தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு.தே. செந்தில்வேலவர், இசைத்துறையில் ஓய்வுநிலை ஆசிரியர் ஆலோசகர் திரு. வி.கணேசலிங்கம், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிதிச்செயலாளர் செல்வ திருச்செல்வன், அறிமுகவுரையை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க. இரகுபரன், நயவுரையை பேராசிரியர் வ. மகேஸ்வரன் ஆகியோர்கள் நிகழ்த்துவார்கள்.



தம்பதியினர் பலர் மங்கல விளக்கேற்றி விழாவை சிறப்பாக ஆரம்பித்து வைப்பார்கள் ஏற்புரையை ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்துவார்.

தொகுப்பு:
கே.பொன்னுத்துரை...

# வடக்கின் உதயம்

## மன்னார் பேசாலை கடற்கரையில் கரையொதுங்கிய மீனவரின் சடலம்

### பொலிஸார் விசாரணைகளை முன்னெடுப்பு

**(மன்னார் குறூப் நிருபர்)**



மன்னார் பேசாலை கடற்கரையிலிருந்து கடந்த 20 ஆம் திகதி மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை(23) காலை சடலமாக கரையொதுங்கியுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட மீனவர் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த 26வயதுடைய கஸ்டார் அலெக்ஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கடந்த 20 ஆம் திகதி மீனவர் பேசாலை கடற்கரை மீன்பிடி துறை முகத்தில் படகு மூலம் றோலர் கடலுக்குள் மாலை 3 மணியளவில் மீன்பிடிக்க சென்றுள்ளனர். இவருடன் மேலும் இரண்டு மீனவர்கள் சென்றுள்ளனர்.

அவர்கள் கடலுக்குள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் இவர்களது தொழிலை மேற்கொள்ளும் டோலர் படகின் பிரதான வலை கிழிந்தமையால் அதை சீர் செய்து மீண்டும் தொழிலில் ஈடுபடுத்த முற்பட்டனர். எனினும் அது தோல்வியில் முடித்தமையால் இரவு சுமார் 9.30 மணியளவில் பேசாலை கரைக்கு திரும்பி கடற்கரைக்கு சற்று தொலைவில் படகை நங்கூரமிட்டு நீந்தி வரமுயற்சித்தனர்.

இதன்போது ஒருவர் தாமதமாகியும் கரைக்கு வரவில்லை. இதனையடுத்து இரண்டு மீனவர்களும் உரிமையாளரிடம் முறையிட்டு பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளனர்.

அதனைதொடர்ந்து காணாமல் போனவர் நேற்று திங்கட்கிழமை (23) காலை பேசாலை மீன்பிடி துறைமுகத்திற்கு மேற்கு பக்கமாக சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவருடன் தொழிலுக்கு சென்ற இருவர் மற்றும் அவரது மனைவி, உறவினர், தொழில் உரிமையாளர் ஆகியோரிடம் பேசாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### வடமாகாண

# தொண்டர் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள்-கடற்றொழில் அமைச்சர் சந்திப்பு

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடற்றொழில் அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நீண்ட காலமாக தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றி வருகின்ற தமக்கு, நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தருமாறு இதன்போது அமைச்சரிடம் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதுதொடர்பாக தன்னால் ஏற்கனவே பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எடுத்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இன்னும் சில மாதங்கள் பொறுத்திருக்குமாறும், அமைச்சரவைப் பத்திரமொன்றிள் ஊடாக தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்றுத் தரப்படும் எனவும் தெரிவித்தார்.



## நெற்செய்கைகளில் புதிய வகை நோய் தாக்கம் விவசாய போதனாசிரியர்களை நாடுவது சிறந்தது

### விவசாய பணிப்பாளரான சக்கிலா பானு

**(தலைமன்னார் விசேட நிருபர்)**

நெற்செய்கைகளுக்கு ஒருவகையான நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளதால் விவசாயிகள் இவற்றை உடனடியாக கண்காணித்து அயலிலுள்ள விவசாய போதனாசிரியர்களை நாடுவது சிறந்தது என மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளரான சக்கிலா பானு இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளரான சக்கிலா பானு மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக நாட்டில் வயல்களில் மஞ்சள் நிறமாதல் நோய் இனம்காணப்பட்டு வருகின்றது.

பனிபூச்சித்தாக்கம் அல்லது கபிலநிறபுள்ளி நோய் அல்லது வேர் முடிச்சு வட்ட நோய் ஆகியவற்றின் தாக்கம் அதிகரித்து வருவதாக அறியக்கூடியதாகவிருக்கின்றது.

இந்த வேர்முடிச்சு வட்டப்புழு என்பது இவ்வளவு காலமும் மரக்கறி மற்றும் மேட்டுப் பயிர் செய்கையிலேயே தாக்கத்தை உருவாக்கி வந்துள்ளது. ஆனால், இந்நோய் தற்பொழுது நெற்பயிர்களிலும் தாக்கத்தை ஏற்படுத்த தொடங்கியுள்ளது.

புதிதாக உருவாகும் இலைகள் சிதைந்து விழிம்புகள் சுருண்டு வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றது.

அத்துடன் இத்தாக்கத்தினால் வயல் மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

அதிகமாக பாதிக்கப்பட்ட வயல்கள், நாற்றுக்கள் எல்லாம் கதிர்வரும் பருவத்துக்கு முன்னரே முதிர்ச்சி அடைந்துவிடும். கபில நிறமாக வயல் மாறிவிடும்.

கபிலநிறப்புள்ளி நோய் ஏற்பட்டாலும் இங்கு வட்டப்புழு தாக்கமும் இருப்பதாக கருதலாம்.

வட்டப்புழு என்ற நோய் நீர்ப்பாசனம் செய்யப்பட்ட அல்லது வெள்ளப்படுத்திய நீரிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது.

ஆகவே வயல்களுக்கு நீர்பாசனம் செய்யப்படும்போது தனித் தனி வயலாக நீர்பாசனம் செய்யப்பட வேண்டும். குறிப்பாக ஒரு வயலிருந்து இன்னொரு வயலுக்கு நீரைக் கடத்தாமல் தனித் தனி வயலாகவே நீர்பாசனம் மேற்கொள்ள வேண்டும்.

ஒரு வயலில் பாவிக்கப்படும் விவசாய உபகரணங்கள் நன்கு சுத்தம் செய்த பின்பே மீண்டும் பாவிக்கப்பட வேண்டும்.

விவசாயிகளும் ஒரு வயலில் வேலை செய்தபின்னர் தங்கள் கை கால்களை சுத்தம் செய்த பின்பே மற்றைய வயலுக்கு வேலைக்குச் செல்லவேண்டும்.

மேலும் சிபாரிசு செய்யப்பட்ட சமநிலையான பசளைகள் பாவிக்கப்பட வேண்டும். பசளைகள் கூடுதலாகவோ அல்லது குறைவாகப் பாவித்தாலும் வயலுக்கு பாதிப்புக்கள் ஏற்படும்.

விவசாயிகள் உங்கள் பகுதியில் இவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டால் உடனடியாக அயலிலுள்ள விவசாய போதனாசிரியர்களை நாடவும். அல்லது தன்னுடன் தொடர்பு கொள்ளும்படிஅவர் மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோதமாக பசுமாடு கடத்தல்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

குடத்தனை கிழக்கு மாளிகைத்திடல் பகுதியில் பருத்தித்துறை பொலிஸாரால் சட்டவிரோதமாக இறைச்சிக்காக வெட்டுவதற்கு தயாராகவிருந்த பசுமாடு ஒன்று மீட்கப்பட்டுள்ளதுடன் கப் ரக வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் அதிகாலை பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் உடனடியாக விரைந்த பொலிஸார் இறைச்சிக்காக வெட்டப்பட்ட மாட்டின் இறைச்சியையும், வெட்டுவதற்கு தயாராக கட்டப்பட்டிருந்த ஒரு பசுமாட்டை மீட்டுள்ளதுடன் கப்ரக வாகனமொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

## முன்னாள் போராளி மீது தாக்குதல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மறவன்புலோ பகுதியில் நேற்று காலை முன்னாள் போராளி ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. உறவு முறையிலான நபரொருவர் தன்னை அழைத்து தாக்குதல் மேற்கொண்டிருப்பதாக அந்த முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். தாக்குதலுக்கு இலக்கான நபர் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரென தெரிவிக்கப்படுகின்றது.

## கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட இடங்களில் மீள்காடாக்கல் செயற்றிட்டம்

**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு புத்து வெட்டுவான் முதிரைச் சோலை பகுதியில் கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட 54 ஏக்கர் நிலப்பரப்பில் 5773 மரக்கன்றுகள் விடியல் ஆடை தொழிற்சாலையினால் மீள்காடாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறன.

முல்லைத்தீவு மாவட்டத்தின்; துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புத்துவட்டுவான் முதிரைச்சோலை ஆகிய இடங்களில் சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு கிரவல்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட பெரும்பாலான பகுதிகளில் மழை நீர் தேங்கியும் வெட்டை வெளியாகவும் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் கிரவல் அகழ்வுகளுக்கு அனுமதிகளை வழங்கும் போது அழிக்கப்படும் காடுகளுக்கு பதிலாக மீள் நடுகை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை மீள் நடுகை செய்யப்படவில்லை .

இந்நிலையில்; கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கி வரும் விடியல் ஆடை தொழிற்சாலையின்; சமூக நலத்திட்டத்தின் மீள் காடாக்கல் திட்டத்தின் கீழ் 54 ஏக்கர் நிலப்பரப்பில் 5773 மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் இலகுவில் வளரக்கூடிய இலுப்பை, மருதம், கரந்தகாயா, தேக்கு, கும்புக் ரோபரோசியா, மா, பலா போன்ற மரங்கள் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

**யாழ். விசேட நிருபர்**

மல்லாகம் பகுதியில் 250 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவர் ஏழாலை தெற்கைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் என பொலிஸார் தெரிவித்தனர்.



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நிர்வாக சபையினர் மற்றும் ஊழியர்களின் முயற்சியினால் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச்செய்கையின் நெல் புதிர் எடுப்பு நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

படம் – யாழ். விசேட நிருபர்

## அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் திருவுருவச் சிலை திறப்பு விழா

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் உடுவில் மற்றும் மானிப்பாய் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் திருவுருவச் சிலை திறப்பு விழா நேற்றைய தினம் திங்கட்கிழமை வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் போராசிரியர் சி.சிறிசற்குணராசா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு திருவுருவச் சிலையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி அறு திருமுருகன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.கஜதீபன், பிரதேச சபையின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







## விலைமனுகளுக்கான அழைத்தல்

வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலைய மற்றும் விமானசேவைகள்

BID No. : 065/T/2022

**2022ஆம் ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலைய பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு பணியாளர்களுக்கான சீருடை சப்பாத்துக்களை வழங்கல்**

2022ஆம் ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட (தனியார்) ஸ்ரீலங்கா விமானநிலைய பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு பணியாளர்களுக்கான சீருடை சப்பாத்துக்களை வழங்குவதற்காக விலைமனுக்கள் வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவகளின் தலைவரினால் கோரப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக நாலாயிரம் ரூபாவை (4,000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023.01.25 ஆம் திகதியிலிருந்து 2023.02.13 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2023 பெப்ரவரி 14ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விமைனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் இரண்டு இலட்சத்து பதினாலாயிரத்து ஐந்நூற்றி அறுபது இலங்கை ரூபாவிற்கு (214,560.00 இ. ரூபா) நிகரான விலைமனுப்பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து 011-2264102/011-2264103 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் head.scm@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# கிழக்கின் குரல்



## மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோயாளர் குடும்பங்களுக்கு விசேட கொடுப்பனவு

*ஒலுவில் விசேட நிருபர்*



குறைந்த வருமானத்தின் கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் நீண்டகாலமாக சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை மையமாக வைத்து 4 மாதங்களுக்கு விசேட கொடுப்பனவை வழங்கவுள்ளதாக, அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் தெரிவித்தார்.

இம்மாதமான ஜனவரி முதல் ஏப்ரல் வரை இக்கொடுப்பனவை வழங்கவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான சுற்றுநிருபம் அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள், சமுர்த்தித் தலைமையக முகாமையாளர்கள், மாவட்ட சமுர்த்தி வங்கி முகாமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 5,000 ரூபா கொடுப்பனவுக்கு மேலதிகமாக 2,500 ரூபாவை வழங்கவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களைக் கொண்ட காத்திருப்புப் பட்டியலிலுள்ள குடும்பங்களுக்கு 5,000 ரூபா விசேட உதவித்தொகையை வழங்கவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

காத்திருப்போர் பட்டியலிலுள்ள குடும்பங்களின் விவரங்கள் கடந்த டிசெம்பர் மாத புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இருக்க வேண்டுமெனத் தெரிவித்த அவர், இயலாமை காரணமாக வங்கிக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத பயனாளிகளுக்கு, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களூடாக பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## க.பொ.த. உயர்தரம்; மட்டக்களப்பில் 9,044 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்

*மட்டக்களப்பு, கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்*



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 9,044 பரீட்சார்த்திகள் தோற்றுவதாக, மட்டக்களப்பு மாவட்ட பரீட்சை நிலையம் தெரிவித்தது.

இவர்களில் பாடசாலை பரீட்சார்த்திகள் 7,132 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 1,912 பேரும் அடங்குகின்றனர்.

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை நேற்று (23) ஆரம்பமாகியுள்ளதுடன், எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 63 பரீட்சை நிலையங்களும் 8 இணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சிங்களமொழி மூலம் இருவரும் ஆங்கிலமொழி மூலம் 24 பேரும் தோற்றுவதாகவும், மட்டக்களப்பு மாவட்ட பரீட்சை நிலையம் தெரிவித்தது.

கல்குடா, மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி, மண்முனை மேற்கு, பட்டிருப்பு ஆகிய 5 கல்வி வலயங்களிலும் பரீட்சை நடைபெறுவதாகவும், மட்டக்களப்பு மாவட்ட பரீட்சை நிலையம் தெரிவித்தது.

## மூதூர்-திருமலை படகு விபத்து; நாளை 30ஆவது சிரார்த்த தினம்

*மூதூர் தினகரன் நிருபர்*

மூதூர் திருகோணமலை படகு விபத்தில் உயிரிழந்தோரின் 30ஆவது வருட சிரார்த்த தினம் மூதூர் பிரதேசத்தில் நாளை (25) அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த 1993ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகளுடன் திருகோணமலையிலிருந்து மூதூர் நோக்கிப் புறப்பட்ட மோட்டார் படகொன்று, பாதாளமலை கடற்பரப்பில் ஏற்பட்டிருந்த கடல் கொந்தளிப்பினாலும் பலத்த காற்றினாலும் கடலில் மூழ்கியது.

இப்படகு விபத்து இடம்பெற்று 30 ஆண்டுகள் பூர்த்தியாவதை நினைவுகூரும் வகையில் வணக்கஸ்தலங்களில் விசேட பிரார்த்தனைகளுடன் அன்னதானம் வழங்கப்படவுள்ளது. இவ்விபத்தில் அரச ஊழியர்கள், படை வீரர்கள், ஆண், பெண், சிறுவர்களெனப் பலரும் உயிரிழந்தனர்.

## தேர்தல்; திருகோணமலையில் 162 வேட்புமனுக்கள் தாக்கல்

*தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, ரொட்டவெவ குறூப், கந்தளாய், கிண்ணியா தினகரன் நிருபர்கள்*

2023 உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சிமன்ற சபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட 22 அரசியல் கட்சிகளும் 16 சுயேட்சைக் குழுக்களும் 178 வேட்புமனுக்களுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ள போதிலும், இவற்றினுள் 162 வேட்புமனுக்களே தாக்கல் செய்யப்பட்டதாக, திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரும் மாவட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்கான தெரிவத்தாட்சி அலுவலருமான ஆர்.சசீலன் தெரிவித்தார்.

தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களினுள் அங்கீகரிக்கப்பட்ட 7 அரசியல் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுவொன்றினதும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

13 உள்ளூராட்சிமன்ற சபைகளுக்காக 3,179 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## மூன்று டெங்கு நோயாளர்கள் ஓட்டமாவடியில் இனங்காணல்

*கல்குடா தினகரன் நிருபர்*



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி 208 பி கிராம அலுவலர் பிரிவில் மூன்று டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து, அங்குள்ள வீடுகளில் டெங்கு பரிசோதனை நேற்று (23) மேற்கொள்ளப்பட்டது.

ஓட்டமாவடிக்கு பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யூ.எல்.எம்.ஜின்னாவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையின் போது, டெங்கு நோயின் பாதிப்புத் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது, 134 வீடுகளில் டெங்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், இவற்றில் 5 வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக, ஓட்டமாவடிக்கு பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யூ.எல்.எம்.ஜின்னா தெரிவித்தார்.

## தவறுதலாக அதிக மாத்திரைகளை உட்கொண்ட பெண் உயிரிழப்பு

### மட்டக்களப்பில் சம்பவம்

*மண்டூர் தினகரன் நிருபர்*

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில் உயர் குருதி அழுத்த நோயினால் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் தவறுதலாக அதிகளவான மாத்திரைகளை உட்கொண்டதினால் உயிரிழந்த சம்பவமொன்று இடம்பெற்றதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயான 67 வயதுடைய வரதராஜன் விஜயலெட்சுமி என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாக, மருத்துவப் பரிசோதனையில் தெரியவந்தது.

உயர் குருதி அழுத்த நோயினால் பாதிக்கப்பட்ட இப்பெண், அந்நோய்க்கான மாத்திரைகளைதினமும் எடுத்து வந்துள்ளார்.

சம்பவ தினமான கடந்த சனிக்கிழமை (21) வீட்டில் எவரும் இல்லாத போது, வழமை போன்று தனது நோய்க்கான மாத்திரைகளை தவறுதலாக அதிகளவில் உட்கொண்டதாகவும் பின்னர் மயக்கமடைந்த நிலையில் அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததாகவும் இருப்பினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## கஞ்சா வைத்திருந்த ஒருவருக்கு விளக்கமறியல்

*பாலமுனை தினகரன் நிருபர்*

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலம்குளம் பிரதேசத்தில் கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த இச்சந்தேக நபரை பொலிஸார் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 850 மில்லி கிராம் கஞ்சாவையும் கைப்பற்றினர்.

இச்சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அவரைக் கைது செய்தனர்.

## மட்டக்களப்பு அரசாங்க அதிபருடன் கொமாண்டர் திலீப பண்டார சந்திப்பு

*மட்டக்களப்பு குறூப் நிருபர்*

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவை மட்டக்களப்பு கல்லடியிலுள்ள 231ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் கொமாண்டர் திலீப பண்டார சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடந்த சனிக்கிழமை (21) சிநேகபூர்வமாக இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் உணவுப் பாதுகாப்புத் தொடர்பான விவசாய உற்பத்திகளை ஊக்குவித்தல் உள்ளிட்ட வேலைத்திட்டங்களுக்கு தம்மாலான உதவியை வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாக, கலாமதி பத்மராஜாவுக்கு பிரிகேடியர் கொமாண்டர் திலீப பண்டார தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் பதவியேற்புக்கு வாழ்த்துத் தெரிவித்து பிரிகேடியர் கொமாண்டர் திலீப பண்டார மலர்ச்செண்டொன்றையும் வழங்கினார்.



## 'எனது அரசியல் பயணத்தை ஒருபோதும் கைவிட மாட்டேன்'

### இம்முறை சுயேச்சை குழுவுக்கு பூரண ஆதரவு -மஸாஹிம் மொஹமட்

*அஜ்வாத் பாஸி*



அரசியலில் தொடர்ந்தும் களமிறங்கி தான்சார்ந்த சமூகத்துக்கு சேவை செய்வேனேயொழிய இறுதி மூச்சுவரை அரசியலை கைவிடப் போவதில்லையென பேருவளை நகர சபை தலைவர் மஸாஹிம் மொஹமட் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் களமிறங்குமாறு தலைமைத்துவம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே தான் ஐ.ம.சக்தியில் களமிறங்க விருப்பம் தெரிவித்ததாகவும் இறுதியில் தான் வேட்பாளர் பட்டியலில் புறக்கணிக்கப்பட்டதோடு ஏமாற்றப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பேருவளை நகர பிதா இம்முறை தேர்தலில் புறக்கணிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி கேள்விப்பட்டு அன்னாரின் பேருவளை மருதானை இல்லத்தில் (22) இரவு ஒன்றுகூடிய ஆதரவாளர்கள் ஐ.ம.சவுக்கு எதிர்ப்புக்குரல் எழுப்பி தமது வேதனையை வெளிப்படுத்தியதோடு இம்முறை தேர்தலை புறக்கணிக்கப்போவதாகவும் தெரிவித்தனர்.

ஆதரவாளர்களை அமைதிப்படுத்தி சில விடயங்களை நகர பிதா மனம் திறந்து வெளியிட்டார். இதனை ஏற்றுக்கொண்ட ஆதரவாளர்கள் இம்முறை தேர்தலில் சுயேச்சை குழுவிற்கு பூரண ஆதரவு வழங்க உறுதிபூண்டனர். இதன் பின் கருத்து தெரிவித்த மஸாஹிம் மொஹமட்,

சுமார் 40 வருட அரசியல் வரலாற்றுப்பின்னணியைக் கொண்ட நான், 4 தடவைகள் பேருவளை நகர சபை தலைவராக பணிபுரிந்து வரலாறு படைத்திருக்கிறேன். அதேபோன்று முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் பாக்கீர் மாக்கார், முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோரின் பாசறையில் அரசியல் செய்து வளர்க்கப்பட்டேன்.

இம்முறை தேர்தலில் சுயேச்சை குழுவில் தன்னை களமிறங்குமாறும் கடந்த தேர்தலைப்போன்று இம்முறையும் தனது வெற்றியை உறுதிப்படுத்துவேன் என்றும் எனது மரியாதைக்குரிய பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் என்னைக் கேட்டார். அதனையும் நான் மீறி சிலரின் பேச்சைக்கேட்டு SJB யுடன் பேச்சுவார்த்தை செய்தேன். மூன்று தினங்களாக என்னை அலைக்கழித்து விட்டு இறுதியில் எனது அரசியலுக்கு முடிச்சு போட்டுள்ளனர்.

எனது ஆதரவாளர்களின் கவலையை அடக்கமுடியாது. அவர்களின் வேண்டுகோளில் பேரில் இம்முறை சுயேச்சை குழுவில் களமிறங்கவுள்ள அஸாம் பளீல் தலைமையிலான குழுவினருக்கு பூரண ஆதரவை வழங்கி அவர்களின் வெற்றிக்கு பங்களிப்பு செய்யப் போவதோடு எதிர்கால அரசியல் பயணத்தை ஆரம்பிக்கப்போவதாகவும் நகர பிதா மஸாஹிம் மொஹமட் மேலும் தெரிவித்தார்.

# நகர்வலம்



## சென்னை இலங்கை துணை தூதரகத்தில் தைப்பொங்கல்



அறுவடைக்கு உதவும் சூரியக் கடவுள் (சூரியன்), இந்திரன், இயற்கை தாய் மற்றும் பண்ணை விலங்குகளுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வாக நான்கு நாட்கள் நீடிக்கும் அறுவடைத் திருவிழாவானது பொங்கல் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இது ஜனவரி மாதத்தில் (தை) சூரிய உத்தராயணத்தின் போது கொண்டாடப்படுகிறது.இது தமிழ்நாடு மற்றும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களால் பரவலாகக் கொண்டாடப்படுகிறது, இதன் போது சூரியனை வாழ்க்கையின் ஆதாரமாக வழிபடுகிறது, இது உணவு, செழிப்பு, செல்வம் மற்றும் மகிழ்ச்சியை வழங்கும் நல்ல அறுவடையின் வளர்ச்சியை அனுமதிக்கிறது. சென்னையிலுள்ள துணை உயர் ஸ்தானிகர் டொக்டர் வெங்கடேஷ்வரன் ஏற்பாட்டில் சான்சரி வளாகத்தில் மண் பானையில் பால் காய்ச்சி, இனிப்புப் பொங்கல் தயாரித்து, இலங்கை மக்களுக்கு மகிழ்ச்சியையும், செழிப்பையும் வரவழைக்கும் வகையில், பூஜையை நடத்தியது. நிகழ்ச்சியில் பணிக்குழு ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் 'கிரசண்ட லைட்' நிகழ்வு

*ருஸைக் பாரூக்*






கொழும்பு சாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த "கிரசண்ட் லைட்" வருடாந்த இராப்போசன விருந்து சங்கத் தலைவர் அலவி முக்தார் தலைமையில் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெற்றது.இதில் பிரதம அதிதியாக இலங்கைக்கான சவுதி அரேபியாவின் தூதுவர் கலாநிதி காலிட் மக்கி கலந்து கொண்டார்.தேசத்திற்கு சேவையாற்றிய கல்லூரி மாணவர்களாகிய இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியவற்றைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பரீஸ் யூசுப், லெப்டினன்ட் கர்னல் எம்.எஸ். இப்ராஹிம், கர்னல் ஆர்.டி. அன்சார் மற்றும் ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டி.பி. சம்சுதீன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் மற்றும் ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளர் நுஸ்ரி முன்சூர், பிரதி சாரணர் ஆணையாளர் சக்காப் முஹீத், சட்டத்தரணி அஷ்ரப் ரூமி ஆகியோர் பாராட்டப்பட்டதோடு காலஞ்சென்ற பெரோஸ் இன்ஹாம் ஆகியோரின் தன்னலமற்ற சேவைகளுக்காகவும் இங்கு பாராட்டப்பட்டது.

இவ்விழாவில் ஆளுநர் சபை தலைவர் பௌசுல் ஹமீட், சாஹிரா கல்லூரி SPORTS COMPLEX தலைவர் ஜிஸ்தி பௌமி, பிரதி அதிபர், உப அதிபர்கள், இராப்போசன ஏற்பட்டு குழுவின் இணைத் தலைவர்கள் ரபீக் புஹாரி, இப்ராஸ் கமில் மற்றும் பழைய மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

வன சீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

**வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

# கேள்வி அழைப்பு

01. வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளுக்காக முன் தகைமையுள்ள கேள்விதாரர்களால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியலாளர் மதிப்பீட்டும் பெறுமதி (வெட் இன்றி ரூ. மில்லியன்) | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்ப கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20-B-16-2022 | ரந்தெனிகல Tree Centre பயிற்சி நிலையத்தில் கட்டிடம் (D -10) பழுது பார்த்தல் | 17.7 | C6 அல்லது அதற்கு மேல் (கட்டிடங்கள்) | 5,500.00 | 267,000/- 2023.05.30 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் |

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடைபெறும்

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2023.02.13 வரை அரச வேலை செய்யும் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பத்தரமுல்ல வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. இவ் ஒப்பந்தம் சம்பந்தமாக நடைபெறும் கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.02.03 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு ரந்தெனிகல Tree Centre பயிற்சி நிலையத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

05. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களாலும் கடந்த 03 மாத வங்கிக் கூற்றை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2023.02.14ம் திகதி வரை வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்து மூல வேண்டுதல் மற்றும் CIDA பதிவுப் புத்தகம் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

07. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் குறித்த செயற்திட்டங்களை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

08. மேற்படி கேள்வி பிணையை வங்கி மூலம் சமர்ப்பிப்பதாயின் தரப்பட்டுள்ள பெறுமதி தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகுமாறு அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை காசாக செலுத்துவதாயின் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்வி பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின கீழ் 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து PCA03 சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

09. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறு வேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2023.02.14 பி.ப. 2.30 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை திறத்தல் அன்றே (2023.02.14) பி.ப. 2.30 இற்கு இடம்பெறுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

10. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் 0112 871537 தொ. பே. மூலம் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (நிதி)ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரியதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றிய தீர்மானம் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.

11. கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படுகின்ற எந்த ஆகு செலவுகள் சம்பந்தமாக தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறுப்புக்கூறப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்பத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## அறிவித்தல்

**2021 க்கான க.பொ.த. (உ/த) மீள் ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் பெறுபேறுகள் மாற்றம் பெற்ற விண்ணப்பதாரர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தவறியதால் மேன்முறையீடு செய்த விண்ணப்பதாரர்களிடமிருந்து, 2021/2022 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.**

17 ஆம் திகதி ஜனவரி, 2023 அன்று வெளியிடப்பட்ட 2021 க்கான க.பொ.த.(உயர்தர) மீள்ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் பெறுபேறுகள் மாற்றம் பெற்ற விண்ணப்பதாரர்கள் மற்றும் 2021/2022 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முன்னர் வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் விண்ணப்பிக்க தவறியதால் மேன்முறையீடு செய்த விண்ணப்பதாரர்களிடமிருந்தும், இணையவழி மூலம் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. அத்தகைய விண்ணப்பதாரர்கள் 2021/2022 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு 24ஆம் திகதி ஜனவரி 2023 முதல் 31ஆம் திகதி ஜனவரி 2023 வரை இணையவழி மூலம் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை கோருவது குறித்த செய்தித்தாள் விளம்பரம் ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.ugc.ac.lk) வெளியிடப்பட்டுள்ளது.

**முக்கியம்**

**2021/2022 கல்வியாண்டிற்கு செல்லுபடியாகும் பல்கலைக்கழக அனுமதி கைநூலில் கொடுக்கப்பட்டுள்ள மற்ற தேவைகளை பூர்த்தி செய்து, இணையவழி மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு உருவாக்கப்பட்ட அச்சிடப்பட்ட முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் அல்லது தெளிவான புகைப்படத்தை அனுப்புவது கட்டாயத் தேவை என்பதை நினைவில் கொள்ளவும். apply2021@ugc.ac.lk என்ற மின்னஞ்சலுக்கு, பதிவுத் தபால் மூலம் அனுப்பவும்.**

**விருப்பொழுங்கு வரிசையை மாற்றுவதற்கு வழங்கப்பட்ட 30 நாட்கள் கால அவகாசம் இந்த சந்தர்ப்பத்தில் பொருந்தாது என்பதை நினைவில் கொள்ளவும்.**

**மேலும், மேற்கூறிய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் 2021/2022 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான இந்த வாய்ப்பு, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தால் /வளாகம் /நிறுவனத்தினால் ஏற்கனவே நடாத்தப்பட்ட செயன்முறை/உளச்சார்பு தேர்வுகள் கொண்ட கற்கைநெறிகளுக்குப் பொருந்தாது என்பது குறிப்பிடத்தக்கது.**

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
**24.01.2023**

CSIAP THE WORLD BANK

# Invitation for Bids

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of Agriculture**

## National Competitive Bidding

**Climate Smart Irrigated Agriculture Project (CSIAP)**
**Project No: P163742**
**IFB No: 2022/08**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) – World Bank in the cost of the Climate Smart Irrigated Agriculture Project of the Ministry of Agriculture and it intends to apply part of the proceeds of this credit to eligible payments under the Contracts given in the table below.

2. The Chairman, Regional Procurement Committee (Northern Province) on behalf of the Climate Smart Irrigated Agriculture Project (CSIAP) invites sealed bids from eligible and qualified bidders for the construction works described in the table below.

| Lot No | Contract No | Description of Work | Estimated Total Cost Excluding VAT(LKR) | CIDA Registration | Non -refundable Fee (LKR) | Bid Security Value in (LKR) and Validity Date |
|---|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA-276733-CW-RFB / NP/DPDO/Rehb.T (116)/2022/044 | Rehabilitation of Kanchuramooddaikulam Tank at Pandaravanni Village Oddusuddan ASC Area, Oddusuddan DS Division at Mullaitivu District in Northern Province. | 10.50 Mn | C6 or C5 | **7,500.00** | **158,000.00 27th June 2023** |
| 02 | LK-MOA-276826-CW-RFB / NP/ DPDO/Rehb.T(71) /2022/028 | Rehabilitation of Konankulam Tank at Manavalanpaddamurripu Village, Olumadu ASC Area, Oddusuddan DS Division at Mullaitivu District in Northern Province | 10.50 Mn | C6 or C5 | **7,500.00** | **158,000.00 27th June 2023** |
| 03 | LK-MOA-276406-CW-RFB / NP/ DPDO/Rehb.T(113) /2022/043 | Rehabilitation of Panichchaimurippukulam Tank, at Kathlaiyarsamalankulam Village, Oddusuddan ASC Area, Oddusuddan DS Division at Mullaitivu District in Northern Province | 28.70 Mn | C5 or C4 | **7,500.00** | **430,000.00 15th August 2023** |
| 04 | LK-MOA-276499-CW-RFB / NP/ DPDO/Rehb.T (134) /2022/055 | Rehabilitation of Nallimurippukulam Tank and Puliyankulam Tank Puliyamhulam, Oddusuddan ASC Area, Oddusuddan DS Division at Mullaitivu District in Northern Province | 30.00 Mn | C5 or C4 | **7,500.00** | **450,000.00 15th August 2023** |
| 05 | LK-MOA-276384-CW-RFB / NP/ DPDO/Rehb.T(86) /2022/033 | Rehabilitation of Alaikallupoddakulam Tank at Thanduvan Village, Oddusuddan ASC Area, Oddusuddan DS Division at Mullaitivu District in Northern Province | 33.20 Mn | C5 or C4 | **7,500.00** | **500,000.00 15th August 2023** |
| 06 | LK-MOA-276418-CW-RFB / NP/ DPDO/Rehb.T (88)/2022/ 034 | Rehabilitation of konamadu Tank and Velikonamadu Tank at Thanduvan Village, Oddusuddan ASC Area, Oddusuddan DS Division at Mullaitivu District in Northern Province | 33.70 Mn | C5 or C4 | **7,500.00** | **505,000.00 15th August 2023** |
| 07 | LK-MOA-276381-CW-RFB / NP/ DPDO/Rehb.T(131) /2022/052 | Rehabilitation of Sinnachalampan Tank at Oddusuddan Village, Oddusuddan ASC Area, Oddusuddan DS Division at Mullaitivu District in Northern Province | 38.30 Mn | C5 or C4 | **7,500.00** | **575,000.00 15th August 2023** |
| 08 | LK-MOA-276413-CW-RFB / NP/ DPDO/Rehb.T(69) /2022/026 | Rehabilitation of Karuvelankandalkulam Tank at Karuvelankandal Village, Oddusuddan ASC Area, Oddusuddan DS Division at Mullaitivu District in Northern Province | 55.10 Mn | C4 or C3 | **10,000.00** | **825,000.00 15th August 2023** |
| 09 | LK-MOA-276504-CW-RFB / NP/ DPDO/Rehb.T(63) /2022/021 | Rehabilitation of Puthukkulam Tank and Embaikulam Tank at Kathlaiyarsamalan kulam Village, Oddusuddan ASC Area, Oddusuddan DS Division at Mullaitivu District in Northern Province | 80.80Mn | C4 or C3 | **10,000.00** | **1,212,000.00 15th August 2023** |
| 10 | LK-MOA-276846-CW-RFB / PMU(NP)/ Rehb.T(48)/2022/ 006 | Rehabilitation of Down Stream works under Vanneri irrigation Scheme at Vannarikulam Village,Akkarayan ASC area ,Karaichchi DS Division at Kilinochchi District in Northern Province | 81.50 Mn | C4 or C3 | **10,000.00** | **1,223,000.00 15th August 2023** |
| 11 | LK-MOA-276814-CW-RFB /NP/DPDO/ Rehb.T (27)/2022/010 | Rehabilitation of Manalkulam Tank at Uyilankulam Village, Thunukai ASC Area, Thunukai DS Division at Mullaitivu District in Northern Province | 92.10Mn | C4 or C3 | **10,000.00** | **1,380,000.00 15th August 2023** |
| 12 | LK-MOA-265609-CW-RFB / NP/ DPDO/Rehb.T(140) /2022/058 | Improvement of Uppuvil Tank in Vannerikulam GND and Village, Akkarayan ASC Area, Karaichchi Divisional Secretaries Division at Kilinochchi District in Northern Province | 102.1Mn | C4 or C3 | **12,500.00** | **1,532,000.00 15th August 2023** |
| 13 | LK-MOA-276265-CW-RFB / NP/ /Rehb.T(7)/2022/ 001 | Rehabilitation of Parayan kulam and Pidaaripalluam Tank in at Vannerikulam GND and Village, Akkarayan ASC Area, Karaichchi DS Division at kilinochchi District in Northern Province | 126.7Mn | C4 or C3 | **12,500.00** | **1,900,000.00 15th August 2023** |

3. Bidding shall be conducted through National Competitive Bidding (NCB).

4. Interested bidders may obtain further information from **Deputy Project Director, Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi (T.P: 021 228 4881 Fax: 021 228 4880, Email: dpd.np@csiap.lk),** and inspect the bidding documents free of cost at the same place on working days from **9.00 hrs to 14.00 hrs.**

5. To be eligible for Contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the requirements in Bidding Document. Further the successful bidder shall have valid registration Grade in Construction Industry Development Authority (CIDA) as mentioned in above Table under the specialty of **Irrigation & Drainage Canals.** Bidders are free to bid for more than one Contract but selections, will be made accordingly to the financial and other capacity limits of the Contractors.

6. Bidding Document in English Language can be purchased by eligible bidders on the submission of a written application on original Letter Head to the **Deputy Project Director** at the address mentioned in **item 4** above, and paying a non-refundable fee (Please refer above table for the amount) in Cash only on Working days from
   - **21st February 2023** to **14th March 2023** from **09:00 hrs.to 14:00 hrs. for Lot no 01 & 02.**
   - **21st February 2023** to **21st March 2023** from **09:00 hrs.to 14:00 hrs. for Lot no 03, 04, 05, 06, 07, 08,09,10,11, 12 & 13**

7. Pre-bid meeting and subsequent Site Visit will be arranged on **28th February 2023** at 10.00 Hrs, at the place mentioned in **item 4** above. Prospective bidders are requested to inspect the sites with the assistance of the relevant officers at their own cost.

8. Bid must be accompanied by an Unconditional Bid Guarantee on prescribe format in the Bidding Document for the value and date mentioned in above Table. Any Bid without a valid Bid Guarantee as indicated will be considered as non-responsive and rejected without any query.

9. All pages of the Bidding Documents shall be signed by the bidder and affixed his seal.

10. The Bids shall submit as the Original and the Duplicate. The original and the duplicate should be Enclosed in separate sealed envelopes and marked as the "Original" and "Duplicate"' respectively. Both envelopes shall be enclosed in a sealed single envelope, and write the Description of Work and Contract No on top of left-hand corner of the envelope.

11. Completed Bids shall either be deposited in the Tender Box kept for this purpose or send under registered post address to **The Chairman, Regional Procurement Committee (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi** to reach
   - on or before **14:00 Hrs. (2.00 p.m.) on 14th March 2023 Lot no 01 & 02.**
   - on or before **14:00 Hrs. (2.00 p.m.) on 21st March 2023 Lot no 03,04,05,06,07,08,09,10,11, 12 & 13**

12. Receiving of the Bids shall be closed
   - at **14:00 Hrs. (2.00 p.m.) on 2023-03-14 for Lot no 01 & 02**
   - at **14:00 Hrs. (2.00 p.m.) on 2023-03-21 for Lot no 03,04,05,06,07,08,09,10,11, 12 & 13**

Late Bids shall not be accepted. Bids will be opened immediately after closing in the presence of the bidders or bidders' representatives who choose to attend.

**Chairman,**
**Regional Procurement Committee (Northern Province) Climate Smart Irrigated Agriculture Project,**
**Deputy Project Director's Office (Northern Province), Kovinthankadai Junction,**
**Wilson road, Kilinochchi**

Date - 2023-01-24

# தொழில் பெறுவோர் எண்ணிக்கை இந்தியாவில் அதிகரிப்பு

## திறன் இந்தியா திட்டம் செயல்படுவதாக அவதானிகள் கருத்து

இந்தியாவின் துரித அபிவிருத்திக்கு இளைஞர்களிடம் காணப்படக் கூடிய திறன் அபிவிருத்தியின்மையும் பயிற்றப்படாத தொழிலாளர்களும் முட்டுக் கட்டையாக அமைவர் என்ற எச்சரிக்கையை ஒரு சவாலாக இந்தியா எதிர் கொண்டிருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

2030 ஆம் ஆண்டில் இந்தியாவில் 29 மில்லியன் பயிற்றப்படாத சேவையாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு எச்சரித்திருந்தது. புதிய தொழில்நுட்பங்களில் முதலீடு, தொழில்துறைக்கான பயிற்றப்பட்ட ஊழியர்கள் என முன் கூட்டியே தயார் செய்யாவிட்டால் மொத்த உள்ளூர் உற்பத்தியில் 1.97 டிரிலியன் டொலர் பின்னடைவை இந்தியா சந்திக்க நேரிடும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மோடியரசு 2015ம் ஆண்டிலேயே இதைக் கவனத்தில் கொண்டதோடு 'திறன் இந்தியா செயற்திட்டம்' என்ற பெயரில் நாடெங்கும் திறன் அபிவிருத்தித் திட்டம் சுயசார்பு இந்தியாவை உருவாக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டதாக இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தொழில்துறையின் தேவையைக் கருத்திற் கொண்டதாக திறன் அபிவிருத்தி பாடத்திட்டங்களின் வழியே இளைஞர்களுக்கு பயிற்சி வழங்குவதன் மூலம் தொழில்துறையின் தேவைகளை ஈடு செய்வது இதன் நோக்கமாகும்.

பாடசாலைகளிலேயே திறன் அபிவிருத்தி பயிற்சிகளை வழங்குவதும் திறன் அபிவிருத்தி பயிற்சிகளை குறுகிய மற்றும் நீண்டகால இலக்குகளுடன் வழங்குவதும் இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் என அவதானிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# பாக். பொருளாதார நெருக்கடிக்கு முடிவு காணப்படாவிட்டால் நாடு உள்நாட்டு யுத்தத்தை எதிர்கொள்ளலாம்

நாட்டின் மிக மோசமான பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு ஆக்கபூர்வமான யோசனைகளை முன் வைக்காமல் வீட்டில் அமர்ந்தபடியே முன்னாள் பிரதமர் இம்ரான்கான் அளிக்கும் பேட்டிகள் மற்றும் அறிக்கைகளுக்கே பாக். ஊடகங்கள் மூன்னுரிமை வழங்கி வருவது ஊடக அநாகரிகம் என்று பாக். அரசியல் பொருளாதார வட்டாரங்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளன.

சமீபத்தில் இஸ்லாமாபாத் சட்டத்தரணிகள் சங்கத்தின் அழைப்பில் சொற்பொழிவொன்றை நிகழ்த்திய பக்துங்காவா மில்லி அவாமி கட்சியின் தலைவர் மெஹ்மூத்கான், பொருளாதார நெருக்கடி, ஏழ்மை மற்றும் பண வீக்கம் என்பன உச்சமடைந்திருப்பதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் சரியான தருணத்தில் மேற்கொள்ளப்படாவிட்டால்நாட்டில் அராஜகம் ஓங்கி உள்நாட்டு யுத்தத்துக்கு வழி வகுக்கலாம் என எச்சரிக்கை விடுத்திருந்தார்.

தற்போது நாடு எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளை சரி செய்ய வேண்டுமானால் இம்ரான் உட்பட அனைத்து கட்சிகளும் ஒன்றாக அமர்ந்து தீர்வுக்கான வழிவகைகளை ஆராய்வதே ஒரே வழி என இவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதைவிடுத்து இம்ரான் கானின் அறிக்கைகளுக்கு பாக். ஊடகங்கள் முக்கியத்துவம் அளிப்பதால் எதுவும் நடக்காது என்றும் இவர் தன் உரையில் தெரிவித்திருந்தார்.

# பாகிஸ்தானில் மா, தானியங்களுக்கு தட்டுப்பாடு டொலர் பிரச்சினையால் கொள்கலன்கள் தேக்கம்

## நோன்பு காலத்தில் உணவு பற்றாக்குறை ஏற்படலாம் என எச்சரிக்கை

பொருள் இறக்குமதிக்கான கடன் பத்திரங்களை வழங்குவதில் பாக். வங்கிகள் தாமதம் காட்டியும் இழுபறி செய்தும் வருவதால் பாகிஸ்தானில் இறக்குமதி பொருட்களுக்கு தட்டுப்பாடும் விலை உயர்வும் ஏற்பட்டிருப்பதாகவும் இந்நிலைக்கு தீர்வு காணப்படாவிட்டால் எதிர் வரும் நோன்பு காலத்தில் தேவையான உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் பாக். வர்த்தக சமூகம் அச்சம் வெளியிட்டுள்ளது.

டொலர் பற்றாக்குறையால் பாகிஸ்தானின் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளை செய்வதில் வங்கிகள் சிரமங்களை எதிர்கொண்டிருப்பதால் கடன் பத்திரங்களை இறுதி செய்வதில் அவை தாமதம் காட்டி வருகின்றன.

இதன் விளைவாக பாகிஸ்தான் இதுவரையில் முகம் கொடுத்திராத மோசமான கோதுமை தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதோடு அவசியமான பருப்பு, சோளம், பாசிப்பயறு மற்றும் இதர தானியங்களின் விலை அதிகரித்துள்ளன. கைபர் பக்துங்காவா, சிந்து மற்றும் பலூசிஸ்தான் மாகாணங்கள் மோசமான உணவுப் பொருள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. இந்நிலையானது நாடு முழுவதும அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் மற்றும் இறக்குமதி மருந்துகள், மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலைமை ஏற்படுத்தும் என்று பாக். அரசு அதிகாரிகள் கருதுகின்றனர்.


சிறு விளம்பரம்



மோட்டார் வாகனங்கள்

106



கார்கள்

விற்பனைக்கு

65-9674 Peugeot 306 Car 2000 கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 004606

117



வேன்கள்

விற்பனைக்கு

51-4544 Nissan Caravan 1986, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 004602

122



மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

NC QP-0443 Bajaj 2008, WP QC-9187 Bajaj 2005, WP AAW-6388 B ajaj 2 015, WP AAE -8976 Bajaj 2012, Three Whee l கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711 2 10 810 . 004598

NW B I Z- 9819 Honda Horn e t 2019, Moto r C ycle கூடிய விலை க் கோரிக்கை க்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810 . 004609

Repeat Your ad For Better Offers



**கம்பனியின் பெயர் மாற்றல் பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
கோல்ட் கொயின் ஃபீட் மில்ஸ் (லங்கா) லிமிட்டட்

**இல: PB 652**

**விலாசம்:**
இல. 205, விஸ்ட்வைக் வீதி, கொழும்பு 15.

**புதிய பெயர்:**
நியு அந்தனீஸ் ஃபீட்ஸ் லிமிட்டட்

செக்ரடேரியஸ் (பிறைவட்) லிமிட்ட்
PV 5958



இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

கடன் குறிப்பிலக்கம் 81161366 மற்றும் 81681763 நிரந்தர மேலதிகப் பற்று குறிப்பிலக்கம் 80149762

இலக்கம் 119, பிரதான வீதி, மாத்தளை எனும் முகவரியைச் சோந்த திரு.ஆறுமுகம் ராமலிங்கம் மற்றும் திருமதி போகலவல கெதர மாலனி ரம்யலத்தா ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2022.12.16ஆம் திகதி **2,311 ஆம்** இலக்க வர்த்தமானியிலும் **2022.12.09ஆம்** திகதி வெள்ளிக்கிழமை **“தினமின”, “தினகரன்”, மற்றும் “டெய்லி நியூஸ்”** ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவினையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் **இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ** என்னும் முகவரியைச் சேர்ந்த **T&H ஒக்ஷனஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.02.24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு** அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**
**ஆதனத்தின் விபரம்**
மேற்குறிப்பிட்ட அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட E356 D, கொங்கவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாத்தளை நகர் மாநகர சபை எல்லையினுள் திருகோணமலை வீதியில் 12 மற்றும் 12/3 என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்துடன் அமைந்துள்ள வளாகத்தின் பகுதி என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜீ.போகஹபிட்டிய தயாரித்த 2011 நவம்பர் 24ஆம் திகதிய 3586ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 01 என அடையாளமிடப்பட்ட காணி குறித்த வரைபடத்தின்படி வட கிழக்கில் 14 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தினையுடைய வளாகத்தினையுடைய காணியையும் தென்கிழக்கில் திரு. பாஸ்டியன் சில்வா என்பவர் உரிமைக்கோரும் காணியும் தென் மேற்கில் 10 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தினையுடையதும் தபாற் கந்தோரினாலும் அபூபக்கர் சரியாக அபுதாஹிர் என்பவரினாலும் உரிமைக்கோரும் வளாகத்தினையுடைய காணியும் வடமேற்கில் திருகோணமலை வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது இருபத்து நான்கு தசம் மூன்று பூஜ்ஜியம் (ஏ0.றூ0.பே24.30) பரப்பளவுடன் இக்காணியும் தோட்டங்கள் மற்றும் அங்குள்ள அனைத்தும் A/152/119 எனும் இலக்கத்தின் கீழ் மாத்தளை காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.**
**இலங்கை வங்கி**
**மாத்தளை**

**பெயர்: திருமதி.டீ.என்.விக்ரமகே**
**பதவி: மூப்புநிலை முகாமையாளர்**



**சி.எம்.எல். — எம்.ரி.டி. கன்ஸ்ரக்ஷன் லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. - PB 1173**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளிற்கு அமைவாக கம்பனி கலைப்பு அறிவித்தலும் கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தலும்

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : சி.எம்.எல். - எம்.ரி.டி. கன்ஸ்ரக்ஷன் லிமிட்டட் |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல. 18, சென் மைக்கெல்ஸ் ரோட், கொழும்பு -03 |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம் கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல. | : HC (CIVIL) 32/2019/CO |
| நீதிமன்ற கட்டளைத் திகதி | : 02.09.2022 |
| கோரிக்கை தாக்கல் செய்த திகதி | : 03.06.2019 |
| கம்பனி கலைப்பாளரின் பெயர் முகவரி | : Gerard Jeevananthan David Liquidator C/o SJMS Associates Level 03, No.11, Castle Lane Colombo 4 |
| நியமன திகதி | : 02.09.2022 |



## பெறுகை அறிவித்தல்

சுகாதார அமைச்சு

**போதனா வைத்தியசாலை குருநாகல்**

01. குருநாகல் போதனா வைத்தியசாலையின் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களிற்காக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
02. 2023.01.24 முதல் 2023.02.14 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 - பி.ப.3.00 இடைப்பட்ட காலப்பிரிவில் குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில் இதற்கான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் கேள்விக்கான ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக வியாபாரப்பதிவு மற்றும் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இவ்வைத்தியசாலையின் பிரதான கணக்காளரிடம் காசாக செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பொது 172 படிவத்தில் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. இரண்டு பிரதிகளில் பிழைகளின்றிப் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்படிவங்கள், அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையத்துடன் 2023.02.15 அன்று மு.ப.10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, “தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல்” என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து சேர்க்கலாம். கேள்விகளை உள்ளடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கருமத்தின் பெயரைக் குறிப்பிடவும்.
04. இப்பெறுகை தொடர்பாக, குருநாகல் போதனா வைத்தியசாலையின் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக அமையும்.
05. இக்கருமம் தொடர்பான முன்னோடிப் பெறுகைக் கலந்துரையாடலொன்று 2023.02.02 அன்று பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெறும்.
06. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் (PCA) (கேள்வி ஆவணங்களை வழங்குவதற்காக மாத்திரம் சான்றிதழுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு ஏற்றுக்கொள்ளப்படும்)
07. இப்பெறுகை தொடர்பான ஏதேனும் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் இருப்பின் அவை www.kurunegalahospital.healthgov.lk என்ற வைத்தியசாலையின் இணையதளத்தில் வெளியிடப்படும்.

| விடய இலக்கம் | வேலை விபரம் | தகைமைகள்/அனுபவம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | 2023 ஆண்டில் விஷேட அலகுகளில் வளிச்சீராக்கி இயந்திரங்கள் 42 இன் சேவை மற்றும் பராமரிப்பு | CIDA (Em04) செல்லுபடியாகும் பதிவு, சேவை மேற்கொள்ளல் தொடர்பாக 03 வருட அனுபவம் இருத்தல். அதில் 01 வருடம் அரச வைத்தியசாலையொன்றில் சேவையாக இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும் | 20,000.00 | 2,000.00 |
| 02 | 2023 ஆண்டில் வைத்தியசாலையின் வாட்டுகள் மற்றும் பல்வேறு அலகுகளில் நிறுவப்பட்டுள்ள 606 வளிச்சீராக்கி இயந்திராதிகளின் சேவை மற்றும் பராமரிப்பு செய்தல் | CIDA (Em04) செல்லுபடியாகும் பதிவு, சேவை வழங்கல் 03 வருட அனுபவம் இருத்தல். அதில் 01 வருடம் அரச வைத்தியசாலையொன்றில் சேவை மேலதிக தகைமையாகக் கருதப்படும் | 50,000.00 | 2,000.00 |

**தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை, குருநாகல்**
**தொலைபேசி இல : 037-2233906 - 09**
**(நீடிப்பு 2800)**



## ஏல விற்பனைக்கான கேள்வி அறிவித்தல்

**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

**யாழ் போதனா வைத்தியசாலையில் 2021/2022 ஆம் ஆண்டுக்கான பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களை ஏல விற்பனை செய்தல்**

தலைவர், ஏல விற்பனை சபை 2021/2022 ஆம் ஆண்டு பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்விமனு கோரப்படுகின்றது.

1. ஏலவிற்பனை தேசிய போட்டி பெறுகைகள் முறைக்கு (NCB) அமைவாக இடம்பெறும்.
2. ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் தை மாதம் 27,28,29 ஆகிய மூன்று தினங்களும் காலை 9.00 மணி முதல் மாலை 1.00 மணி வரை இல.111, பிரதான வீதியில் உள்ள யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலை களஞ்சியத்தில் ஏலவிற்பனைக்கான பொருட்களை பார்வையிட முடியும்.
3. பொருட்களை பெற விரும்புபவர்கள் வைத்தியசாலை காசாளரிடம் ரூபா 500.00 இனை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று கேள்விமனு பத்திரத்தினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
4. மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 10,000.00 இனை வைத்தியசாலை காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பிரதியினையும் இணைத்து கேள்விமனு பத்திரத்தினை பூரணப்படுத்தி மூடிய கடித உறையினுள் இட்டு யாழ் போதனா வைத்தியசாலை கணக்காளர் அலுவலகத்தில் உள்ள பெட்டியினுள் 30.01.2023 திகதி காலை 10.30 மணிக்கு முன்பாக இடுதல் வேண்டும்.
5. அன்றைய தினம் மதியம் 12.00 மணியளவில் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்படும். அதிகூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்விதாரர் காசாளரிடம் அத்தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று அன்றைய தினம் மாலை 05.00 மணிக்கு முன்பாக பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
6. கேள்விமனு மூலம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அப்பொருட்களை பெறுவதிலிருந்து விலகுவாராயின் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணத்தினை மீளப்பெற முடியாது என்பதோடு எதிர்வரும் காலத்தில் வைத்தியசாலையில் இடம்பெறும் ஏலவிற்பனையிலும் பங்குபெற தகுதியற்றவராக கருதப்படுவார்.
7. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் ஏலவிற்பனை சபைக்கு உரியதாகும்
8. மேலதிக விபரங்களை வைத்தியசாலை கணக்காளரின் தொலைபேசி இலக்கம் 021-2223149, 021-2212482 இனை அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்

**பணிப்பாளர் (தலைவர்)**
**ஏலவிற்பனை சபை**
**போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்**
**21.01.2023**

# இரு நூற்றாண்டுகளை கடந்து மலையக மக்களின் மாற்றத்திற்காக, எழுச்சிக்காக பங்காற்றியவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்



இந்தியாவில் இருந்து பெருந் தோட்டங்களில் தொழில்களுக்காக மலையகப் பகுதிகளுக்கு மக்கள் அழைத்துவரப்பட்டு இரு நூற்றாண்டுகள் நிறைவடையும் தருணத்தில் மலையகத்தின் எழுச்சிக்காக, மாற்றத்திற்காகப் பாடுபாட்டவர்களுள் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் வகிக்கும் பாத்திரம் மிகவும் அலாதியானது, பிரத்தியேமானது.

அத்தகைய பங்கினை நாம் ஆராய்ந்து பார்த்தால் மலையக சமூக மக்களின் வளர்ச்சிக்காக மகத்தான பங்களிப்பினை அவர் நிகழ்த்தியுள்ளார். அவரது செயற்திறனின் மூலமாக மலையக மக்களின் மத்தியில் ஒரு சமூகச் செயற்பாட்டாளராக, ஆய்வாளராக, சமூக மாற்றத்திற்கான முகவராக, தளபதியாக, மனித உரிமைச் செயற்பாட்டாளராக, ஒரு சீர்திருத்தவாதியாக, மலையக மக்கள் நீண்ட காலம் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கான சுகாதார பங்காளராக பல்வேறு ஆளுமையுள்ளவராக இவரை அடையாளம் காணலாம்.

அவை மட்டுமல்ல அவர் மலையகப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற தூர நோக்கும் எதிர்காலம் பற்றிய பார்வையும் கொண்டவர். மலையக மாணவர்களிடையே கல்வி எழுச்சியை ஏற்படுத்தவும் அவர்களை வழிநடத்தவும் ஆற்றப்படுத்தவும் வலிமைமிக்கவர். இவர் மலையக சமூகத்தின் இயங்கு சக்தியாக செயற்பட்டு மாற்றங்களை நிகழ்த்தியுள்ளார். இக்கால கட்டத்தில் மலையக சமூகத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வழிகோலிய மனித அபிவிருத்தி தாபனத்தின் தலைவர். பி. பி. சிவப்பிகாசத்தை பாராட்டி கௌரவிப்பது போற்றத்தக்க விடயமாகும்.தெல்தோட்டைப் பத்தாளம் பள்ளிவாசலில் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசத்துக்கு பாராட்டு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

வாழும்போது மனிதர்களை பாராட்ட வேண்டும்.கௌரவிப்பு விழாவை தெல்தோட்ட பத்தாம் பள்ளி மஸ்ஜித்துள் ஜென்னா அரங்கில் நடாத்துவதில் மகிழ்ச்சியடைகிறோம் என்று தலைமையுரையின்போது மஸ்ஜித்துல் ஜென்னா பள்ளிவாசல் நிருவாக சபைத்



தலைவர் ஜனாப் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

இன்றைய காலகட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள சகல இனத்தவர்களையும் ஒருங்கிணைத்து செயற்படுவதில் முன்னிலை வகிக்கும் கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் சேவைக்காகவும், கலாநிதி பட்டம் பெற்றதற்காகவும் தெல்தோட்டை பிரதேச மக்கள் சார்பாக பாராட்டி கௌரவிக்கின்றோம் என்று குறிப்பிட்டார். மேற்படி கௌரவிப்பு விழாவை பள்ளி நிருவாக சபையும், அசிபா பெண்கள் அமைப்பும் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அசிபா பெண்கள் குழு அமைப்பாளர் திருமதி ஹாஜிரா உரையாற்றும் போது....**

பெண்கள் உரிமைகள் குறிப்பாக முஸ்லிம் பெண்களின் உரிமைகள், அவர்களின் அபிவிருத்தி பற்றி இப் பிரதேசத்தில் முதன்முதல் கலந்துரையாடலை மேற்கொண்டது மனித அபிவிருத்தி தாபனமே. சிவப்பிரகாசம் ஐயா, லோகேஸ்வரி அம்மையார் என்போர், நாங்கள் எங்களுடைய பிரச்சினைகளை பேசவும், விவாதிக்கவும் அமைப்பை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். முஸ்லிம், தமிழ், சிங்கள பெண்கள் இணைந்து செயற்பட வழிவகுத்தவர்கள் அவர்களே. எனவே அவர்களை பாராட்டுகின்றோம்.

**மனித அபிவிருத்தி தாபன அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஜனாப் றியாழ்.....**

மனித அபிவிருத்தி தாபனத்தின் பணிப்பாளர் கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் ஐயா மலையக மக்களின் உரிமைக்காகவும், அவர்களின் அபிவிருத்திக்காகவும், சமூக ஒருமைப்பாட்டினை மேம்படுத்தவும் செயற்பட்டு வரும் அதே நேரம், இலங்கையில் ஏற்பட்ட சுனாமி பேரலையின் பின்னர் கிழக்கு மாகாணத்








திற்கு இம் மனித அபிவிருத்தி தாபத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்தி, அப்பிரதேசத்தில் உள்ள மக்களின் உடனடி தேவைகள் தொடக்கம் நிலையான அபிவிருத்திக்காகவும் பல்வேறு செயற்பாடுகளை இன, மத வேறுபாடுகளுக்கப்பால் செயற்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களை இன. மத வேறுபாடுகளுக்கு அப்பால் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவும். அவர்களின் அபிவிருத்திக்காகவும் பல்வேறு வலையமைப்புகளை ஏற்படுத்தி செயற்பட்டு வருகின்றது. கடந்த கால யுத்தம் மற்றும் அரசியல் பிரச்சினை காரணமாக இன ரீதியாக பிரிந்து வாழ்ந்த மக்களை ஒருநிலைப்படுத்தியும், அவர்களின் உரிமைகளை ஒன்றிணைந்து கேட்கக்கூடியவர்களாகவும் மாற்றிய பெருமை இம் மனித அபிவிருத்தி தாபத்தின் தலைவர் கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் ஐயா அவர்களை சாரும் என்றார்.

**அம்பாறை மாவட்ட வேள்வி அமைப்பின் செயற்பாட்டு உறுப்பினரும். அல் மீசான் பெண்கள் அமைப்பின் தலைவி திருமதி. றிலீபா பேகம்...**

மனித அபிவிருத்தி தாபனம் குறிப்பாக பெண்களின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் உரிமை போன்றவற்றை அடிப்படையாக கொண்டு செயற்பட்டு



வருகின்றது. பெண்கள் சமூகத்தில் சமத்துவத்துடன் வாழ வேண்டும் அதற்கான அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்று மக்களை வலுப்படுத்தி திட்டம் தீட்டும் இடத்திலும், சட்டம் போடும் இடத்திலும் பெண்கள் இருக்க வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. அம்பாறை மாவட்டத்தில் பெண்கள் வலையமைப்புகளை உருவாக்கி செயற்படுகின்றது என குறிப்பிட்டார்.

**கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் கருத்துரை வழங்கும்போது.**

நாம் செய்கின்ற சேவைகளை மதித்து இன, மத பேதங்களை கடந்து மக்கள் எம்மை பாராட்டுவது மிக மதிக்கத்தக்கது. அதுவும் குறிப்பாக எங்கள் முஸ்லிம் சகோதர, சதோதரிகள் இவ்வாறான ஒரு கௌரவிப்பை ஏற்பாடு செய்துள்ளமை மிக மிக பாராட்டத்தக்கது. ஒரு பக்கமாக தெல்தோட்டை பிரதேசத்தில் நாம் செய்து வருகின்ற பணிகளுக்காகவும் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் பாராட்டுகின்றனர். மறுபக்கமாக கற்றோர்கள் ஒருங்கிணைந்து நான் கலாநிதி பட்டம் பெற்றமைக்காவும் பாராட்டுகின்றனர். அசிபா பெண்கள் குழுவின் இம் முயற்சிக்கும், அதற்கு வழிகாட்டி வருகின்ற மஸ்ஜித்துல் ஜென்னா பள்ளி நிருவாகத்திற்கும் நன்றியை தெரிவித்தார். மனித அபிவிருத்தி தாபனம் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே ஒரு உறவுப் பாலமாகவே திகழ்ந்து வருகின்றது. மலையக பெருந்தோட்ட மக்களை மையப்படுத்தி பணிகளை ஆரம்பித்தாலும், இன்று பல்வேறு பிரதேசங்களிலும், பல்வேறு இன, மத சமூகங்களிடையே அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் ரீதியாக செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களின் அபிவிருத்தி குறித்து செயற்பட்டு வருகின்றது. இந்த பாராட்டும், கௌரவிப்பும் மேலும் பல்வேறு இன சமூகங்களிடையே பணியாற்றுவதற்கு வழிவகுக்கும் என நம்புகின்றேன் என குறிப்பிட்டார்.

**இக்பால் அலி**





## உள்ளூராட்சி மன்ற தேர்தல்

# நுவரெலியா மாவட்டத்தில் 1345 வேட்பாளர்கள் போட்டி; 17 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

**தலவாக்கலை குறூப் நிருபர்**

நுவரெலியா மாவட்டத்திலுள்ள 12 உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட 108 வேட்பு மனுக்களில் 17 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும் நுவரெலியா மாவட்ட செயலாளருமான நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

அதில் 85 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 06 சுயேச்சைக் குழுக்கள் உட்பட 91 வேட்புமனுக்கள் தேர்தலுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நுவரெலியா மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 10 வேட்பு மனுக்களில் உபாலி தயானந்த தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. கொட்டகலை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 11 வேட்பு மனுக்களில் ராமன் திருச்சந்தூரன் தலைமையிலான சுயேச்சை குழு மற்றும் அபிநவ நிவாஹல் முன்னணி, 'ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி', 'சுதந்திர மக்கள் முன்னணி", 'தேசிய ஜனநாயக முன்னணி "மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 05 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நோர்வூட் பிரதேச சபைக்கு தாக்கல் செய்யப்பட்ட சந்தனம் பிரான்சிஸ் தலைமையிலான சுயேச்சைக் குழு மற்றும் "அபிநவ நிவாஹல் முன்னணி", "ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி" உட்பட சுயேச்சைக் குழுக்களின் 03 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நுவரெலியா பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 10 வேட்பு மனுக்களில் சந்தனம் பிரான்சிஸ் தலைமையிலான சுயேச்சைக் குழு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட 02 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஹங்குரங்கெத்த பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 08 வேட்பு மனுக்களில் புதிய லங்கா சுதந்திரக் கட்சி வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. அக்கரபத்தனை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 09 வேட்பு மனுக்களில் ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. வலப்பனை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 09 வேட்பு மனுக்களில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி சமர்ப்பித்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. அம்பகமுவ பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 09 வேட்பு மனுக்களில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி சமர்ப்பித்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. கொத்மலை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 06 வேட்பு மனுக்களில் தேசிய ஜனநாயக முன்னணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. மஸ்கெலியா பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 12 வேட்பு மனுக்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. தலவாக்கலை லிந்துல நகரசபைக்கு தாக்கல் செய்யப்பட்ட 07 வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அங்கு எந்தவொரு வேட்பு மனுவும் நிராகரிக்கப்படவில்லை. ஹற்றன் டிக்கோயா நகரசபைக்கு தாக்கல் செய்யப்பட்ட 07 வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அங்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனு எதுவும் நிராகரிக்கப்படவில்லை. இதன்படி நுவரெலியா மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் மூலம் 1345 வேட்பாளர்களும் போனஸ் மூலம் 1130 வேட்பாளர்களும் உட்பட 2475 பேர் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக நந்தன கலபட தெரிவித்தார்.



# உலக அமைதி, பாதுகாப்புக்கு இந்திய யோசனைகள் முக்கியம்

## தெற்குலக உச்சிமாநாட்டில் உஸ்பெக் அதிபர் புகழாரம்

உலகில் இன்று பல்வேறு முரண்பாடுகள் உருவாகி இருப்பதோடு உலக பொருளாதார நெருக்கடியின் மோசமான பின் விளைவுகள் மற்றும் நாடுகளிடையே மோதல்கள் எழுந்துள்ள நிலையில் இந்தியா விடுத்திருக்கும் சர்வதேச செய்தியான ஒரே உலகம் ஒரே குடும்பம் என்பது முக்கியமானது என்று உஸ்பெஸ்கிஸ்தான் அதிபர் சௌகத் மிர்ஸியோவேவ் பிரதமர் நரேந்திர மோடியை பாராட்டியுள்ளார். சமீபத்தில் புதுடில்லியில் நடைபெற்ற தெற்குலக நாடுகளுக்கான உச்சிமாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் நிகர்நிலை வழியாகக் கலந்து கொண்டு வாழ்த்துச் செய்தியை விடுத்திருந்தபோதே உஸ்பெஸ்கிஸ்தான் ஜனாதிபதி இந்திய பிரதமரை பாராட்டியதோடு இந்தியாவின் தலைமையிலான ஜி20 அமைப்பின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இது தொடர்பாக உஸ்பெக் ஜனாதிபதி அலுவலகம் விடுத்திருந்த அறிக்கையில், எந்தவொரு நாட்டையும் கைவிடுவதில்லை என்ற ஐ.நா.வின். கோட்பாடு இன்று முக்கியமானது என்றும், அபிவிருத்தியடையும் நாடுகளுடன் பரஸ்பர உதவிகள் அடிப்படையிலான நெருக்கமான உறவைப் பேணும் இந்தியாவின் பங்களிப்பு இந் நோக்கத்தை மேலும் தீவிரப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம், நீர்வளத்தை பயன்தரும் வகையில் பயன்படுத்தல் மாற்று எரிசக்தி வளங்கள் மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தல் ஆகியவற்றை உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களில் அபிவிருத்தி செய்வதற்கு திறன்மிக்க இளைஞர்களை ஊக்குவிப்பதற்கு உலக நாடுகள் முன்வர வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்துள்ளார்.



பசறை வலய கல்வி பணிமனையில் தைப்பொங்கல் விழா சிறப்பாக அண்மையில் இடம்பெற்றது. இதன் போது தமிழர் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. படம்: லுணுகல நிருபர்

# இலங்கை கால்பந்து சம்மேளனம் மீதான தடையை நீக்க பிஃபா மூன்று நிபந்தனை

## புதிய சட்டத்தை அமுல்படுத்த அழுத்தம்

இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் தடை விதிப்பது குறித்து சர்வதேச கால்பந்து சம்மேளனம் இரு கடிதங்களை வெளியிட்டிருப்பது ஊடகங்களில் வெளிவந்துள்ளது.

இதில் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் உபாலி ஹேவகேவுக்கு இந்த இரு கடிதங்களும் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அதில் நாட்டின் கால்பந்து நிர்வாகக் குழுவுக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் தடை விதிப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தடைக்கான பல காரணங்களையும் அந்த இரு கடிதங்களும் குறிப்பிட்டுள்ளன.

ஹேவகேவுக்கு நேரடியாக அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது, "பிஃபா சட்டங்களின் கட்டுரை 16 பந்தி 1க்கு அமையவும் பிஃபா சட்டத்தின் கட்டுரை 14 பந்தி 1 க்கு அமையவும் மேற்கூறிய சூழ் நிலைகள் மூன்றாம் தரப்பினரின் தேவையற்ற தலையீட்டை உருவாக்குவதாக பணியகம் கருதுகிறது. அதனால், பிஃபா சட்டங்களை அப்பட்டமாக மீறியதன் காரணமாக இலங்கை கால்பந்து சம்மேளனத்தை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்த 2023 ஜனவரி 21 ஆம் திகதி பணியகம் தீர்மானித்துன்னது."

மற்றக் கடிதம் பிஃபாவின் அங்கம் வகிக்கும் அனைத்து சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது, "2023 ஜனவரி 21 அன்று பிஃபா சபையின் பணியகத்தின் மூலம் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாக, பிஃபா சட்டத்தின் கட்டுரை 16க்கு அமைவாக மறு அறிவித்தல் வரை இலங்கை கால்பந்து சம்மேளனம் இடைநிறுத்தப்படுகிறது என்பதை நாம் இத்தால் அறியத் தருகிறோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹேவகேவுக்கு அனுப்பிய கடிதத்தில் தடையை நீக்குவதற்கு மூன்று நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் விதிக்கப்பட்டுள்ளது.







புதிதாக நிறைவேற்றப்பட்ட (2022 செப்டெம்பர் 22) இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் சட்டங்களுக்கு அங்கீகாரம் அளிப்பது மற்றும் செயற்படுத்துவதை உறுதி அளிக்கும் பொருட்டு இலங்கை கால்பந்து/ FFSL க்கு தற்போதைய தேசிய விளையாட்டு சட்டத்தில் இருந்து அதிகாரப்பூர்வ மற்றும் எழுத்துப்பூர்வ விலக்கு சட்டப்பூர்வமாக வழங்கப்பட வேண்டும் என்பது இதன் முதல் நிபந்தனையாகக் கூறப்பட்டுள்ளது.

அதேபோன்று 2023 ஜனவரி 14 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலை பிஃபா அல்லது ஆசிய கால்பந்து சம்மேளனம் அங்கீகரிக்காததால் புதிய நிறைவேற்றுக் குழு ஒன்று தேர்வு செய்யப்படும் வரை இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தினசரி விவகாரங்களுக்கு இலங்கை கால்பந்து சம்மேளன நிர்வாகக் குழு பொறுப்பாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மற்றொரு நிபந்தனையாக, புதிதாக நிறைவேற்றப்பட்ட இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் சட்டத்தின்படி புதிய FFSL நிறைவேற்றுக் குழுவுக்கான தேர்தல் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்பதோடு குறிப்பாக அது இரகசிய வாக்கெடுப்பாகவும் நான்கு ஆண்டு தவணையை கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிறைவேற்றுக் குழு இன்னும் கடமைகளை பொறுப்பேற்கவில்லை என்றும் எந்த தடைகள் பற்றியும் உத்தியோகபூர்வமாக அறிவித்தல் கிடைக்கவில்லை என்றும் FFSL செயலாளராக தேர்வு செய்யப்பட்டிருக்கும் இந்திக்க தெனுவர ஊடகம் ஒன்று கடந்த ஞாயிறன்று கூறியிருந்தார்.

இதனால் இந்த விடயம் பற்றி தம்மால் கருத்துக் கூற முடியாது என்று தெரிவித்தார்.

கடந்த ஜனவரி 14ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் மூலம் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் புதிய தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீ ரங்கா தேர்வுசெய்யப்பட்டார். எனினும் முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமர் லெப்பே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் செய்த முறையீட்டை அடுத்து புதிய நிர்வாகத்திற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (20) அந்த உத்தரவு நீக்கப்பட்டது.

இலங்கையின் விளையாட்டுத் துறை அமைச்சர் தன்னை கால்பந்து சம்மேளனத்தின் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கவில்லை என குற்றம் சுமத்தியே ஜஸ்வர் உமர் நீதிமன்றத்திற்கு மனு தாக்கல் செய்தார்.

இந்நிலையில் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் தடை அமுலில் இருக்கும் காலப்பகுதியில் இலங்கை கால்பந்து சம்மேளன பிரதிநிதிகளாலோ அல்லது கழக அணிகள் மூலமாகவோ சர்வதேச தொடர்களில் பங்கெடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் தடை அமுலில் உள்ள சந்தர்ப்பத்தில் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கோ அல்லது அதன் உத்தியோகபூர்வ அதிகாரிகளுக்கோ சர்வதேச கால்பந்து சம்மேளனம் அல்லது ஆசிய கால்பந்து சம்மேளனம் மூலம் கிடைக்கின்ற அனைத்து வகையான நிதிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் கால்பந்து அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் கால்பந்து விளையாட்டை மேம்படுத்துவதற்காக அண்மைய ஆண்டுகளில் 1.5 மில்லியன் டொலர் வீதமான நிதியை வழங்கியுள்ளது. ஆசிய கால்பந்து சம்மேளனமும் இலங்கைக்கு வருடத்திற்கு 5 இலட்சம் அமெரிக்க டொலர் நிதியை வழங்குகிறது. இந்தத் தடையால் இவை அனைத்து நிறுத்தப்படுகின்றன.

# 2022 ஐ.சி.சி டி20 அணிகளில் இலங்கையில் இருந்து இருவர்



சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் கடந்த ஆண்டின் சிறந்த டி20 ஆடவர் மற்றும் மகளிர் அணிகளில் தலா ஒரு இலங்கை வீர, வீராங்கனை இடம்பெற்றுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட்டில் 2022இல் சோபித்த வீரர்களை கொண்டே ஐ.சி.சி 11 வீரர்களை தேர்வு செய்துள்ளது. இதில் ஆடவர் அணியில் இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தின் ஜொஷ் பட்லர் தலைமையிலான இந்த அணியில் விராட் கொஹ்லி, சூர்யகுமார் யாதவ், மொஹமட் ரிஸ்வான் மற்றும் ஹார்திக் பாண்டியா போன்ற முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அதேபோன்று இலங்கை அணியைச் சேர்ந்த முன்னணி சுழல்பந்துவீச்சு வீராங்கனை இனோகா ரணவீர மகளிர் டி20 அணியில் இடம்பெற்றுள்ளார். இனோகா ரணவீர கடந்த ஆண்டு 19 டி20 சர்வதேச போட்டிகளில் விளையாடி 27 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதில் 4 போட்டிகளில் 3 இற்கும் அதிகமான விக்கெட்டுகளை பெற்றுள்ளார்.

இதில் இந்திய அணியின் ஸ்ம்ரிதி மந்தனா, தீப்தி ஷர்மா, ரிச்சா கோஸ் மற்றும் ரேணுகா சிங் ஆகிய நான்கு வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பேருவளை சீனன்கோட்டை யங் சன்ரைஸ் எகடமியில் கால்பந்தாட்ட பயிற்சி பெறும் இளம் வீரர்களுக்கு ஹபீபா ஜெம்ஸ் பணிப்பாளர் அல்ஹாஜ் சிராஸ் ஹனபி ஜெர்ஸிக்களை கைளித்தபோது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம். *(படம்: பேருவளை விசேடம்)*

### மகளிர் டி20 உலகக் கிண்ணம்:

# இந்தியாவிடம் தோற்று இலங்கை வெளியேற்றம்



19 வயதுக்கு உட்பட்ட மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியாவிடம் 7 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்த இலங்கை அணி அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் இந்தத் தொடரில் சுப்பர் 6 சுற்றில் தனது முதல் போட்டியாக கடந்த ஞாயிறன்று (22) இந்திய அணியை சந்தித்த இலங்கை இளையோர் மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்டது.

எனினும் இலங்கை அணி 20 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 59 ஓட்டங்களையே பெற்றது. அணித் தலைவி விஷ்மி குணரத்ன மாத்திரம் 25 ஓட்டங்களை பெற ஏழு வீராங்கனைகள் ஒற்றை இலக்கத்தையே பெற்றனர்.

பதிலெடுத்தாடிய இந்திய அணி 7.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 60 ஓட்டங்களை எட்டியது.

புள்ளிப்பட்டியலில் எந்தப் புள்ளியையும் பெறாது 5ஆவது இடத்தில் இருக்கும் இலங்கை அணிக்கு மேலும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான குழு நிலை போட்டி மாத்திரமே எஞ்சியிருக்கும் நிலையில் தொடரில் இருந்து வெளியேறியுள்ளது.

# பாகிஸ்தான் எங்கும் மின்சாரம் துண்டிப்பு

## பிரதான நகரங்கள் ஸ்தம்பிதம்



பாகிஸ்தானின் தேசிய மின் கட்டமைப்பில் ஏற்பட்ட செயலிழப்பை அடுத்து நேற்று (23) நாடெங்கும் மின் துண்டிக்கப்பட்டுள்ளது.

மிகப்பெரிய நகரான கராச்சி அதே போன்று லாஹூர் மற்றும் பெஷாவர் உட்பட அனைத்து பிரதான நகரங்களிலும் மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.

தெற்கு பாகிஸ்தானில் மீடிறன் மாறுபாடு ஒன்றைத் தொடர்ந்து மின் கட்டமைப்பு செயலிழந்ததாக வலுசக்தி அமைச்சர் குர்ரும் தஸ்தகிர் தெரிவித்துள்ளார்.

எனினும் இது பெரிய பிரச்சினை இல்லை என்றும் விரைவில் மின்சாரம் திரும்பும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மின் துண்டிப்பால் நாட்டின் அன்றாட வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மின்பிறப்பாக்கிகள் ஒரு சில மருத்துவமனைகளில் மட்டுமே இருப்பதால் மற்ற அரசு மருத்துவமனைகள் மின்வெட்டால் கடும் சிக்கலை எதிர்கொண்டுள்ளன.

பாகிஸ்தானில் அந்நியச் செலாவணி குறைந்து நெருக்கடி ஏற்பட்டிருக்கும் நிலையில் மின்சக்திக்கு தேவையான புதைபடிவ எரிபொருளை இறக்குமதி செய்ய வேண்டி உள்ளது.

அரச அலுவலகங்கள் தனது மின் பயன்பாட்டை 30 வீதம் குறைப்பதற்கும் மின்சாரத்தை சேமிப்பதற்கு சந்தைகளை இரவு 8.30 க்கும் உணவு விடுதிகளை இரவு 10 மணிக்கும் மூடுவதற்கு அரசு இம்மாத ஆரம்பத்தில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

### அமெரிக்காவில்:

# 10 பேரை சுட்டுக் கொன்றவர் வாகனத்தில் சடலமாக மீட்பு



அமெரிக்காவில் சந்திர புத்தாண்டு கொண்டாட்டத்தின் போதும் 10 பேரை சுட்டுக்கொன்ற துப்பாக்கிதாரி, தான் தப்பிச் சென்ற வேனில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொலைகள் இடம்பெற்ற மொன்டரி பூங்காவில் இருந்து தென் மேற்காக அமைந்திருக்கும் டொரன்ஸ் சிறு நகரில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்திற்குள்ளேயே துப்பாக்கிதாரியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக கலிபோர்னிய மாநில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் 72 வயது ஹூ கேன் என்பவரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தி இருப்பதாகவும் பொலிஸார் வேன் வண்டியை நெருங்கியபோது தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்திருப்பதாகவும் கலிபோர்னிய கௌண்டி சரிப் றொபர்ட் லூனா தெரிவித்துள்ளார். இதில் வேறு எந்த சந்தேக நபரும் தலைமறைவாக இல்லை என்றும் இந்தத் தாக்குதலுக்கான நோக்கம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்றும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஆசிய அமெரிக்கர்கள் பெரும்பான்மையாக வாழும் லொஸ் ஏஞ்சல்ஸின் கிழக்குப் பகுதியில் உள்ள கார்வே ஒழுங்கையில் இருக்கும் பொல்ரூம் நடன விடுதி ஒன்றில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

இதில் ஐந்து ஆண்கள் மற்றும் ஐந்து பெண்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் நடந்து 30 நிமிடங்கள் கழித்து அந்தத் துப்பாக்கிதாரி மற்றொரு விடுதிக்குள் நுழைய முயன்றபோதும் இருவர் அவரை முறியடித்ததை அடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற மொன்டரி பூங்காவில் சுமார் 65 வீதமான மக்கள் ஆசிய அமெரிக்கர்கள் என்பதோடு அது அமெரிக்காவின் முதல் சீனர்கள் வாழும் புறநகர் பகுதி என அழைக்கப்படுகிறது.

# வேன் விபத்து: 11 பேர் பலி



தாய்லந்துத் தலைநகர் பேங்கொக்கில் ஒரு வேன் விபத்துக்குள்ளானதில் 2 குழந்தைகள் உட்பட 11 பேர் எரிந்து சாம்பலாயினர்.

அந்த வேனில் 12 பேர் இருந்தனர். கடந்த சனிக்கிழமை (21) அம்னாத் சாரனிலிருந்து பேங்கொக் போகும் வழியில் விபத்து நேர்ந்தது.

ஜன்னல் வழி வெளியேறிய ஒரே ஒருவர் மட்டும் உயிர் தப்பினார்.

"உறங்கிக்கொண்டிருந்தபோது திடீரென அலறல் கேட்டது. திடுக்கிட்டு எழுந்தேன்.

கண் விழித்து பார்ப்பதற்குள் வேன் தலைகீழானது. என்ன நடந்தது என்று தெரியவில்லை. உடனே ஜன்னல் வழியே வெளியேறினேன். பின்னர் வேன் வெடித்தது," என்று அவர் குறிப்பிட்டார்.

வேன் வெடித்ததற்கான காரணம் கண்டறியப்படவில்லை. விசாரணை தொடர்கிறது.

# சிரியாவில் கட்டடம் இடிந்து 16 பேர் மரணம்



சிரியாவில் ஐந்து மாடி குடியிருப்புக் கட்டடம் இடிந்து விழுந்ததில் 16 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவின் வடக்கு நகரமான அலெப்போவில் ஞாயிறு (22) அதிகாலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. அந்தக் கட்டடத்தில் உள்ள வீடுகளில் சுமார் 30 பேர் வசித்து வந்தனர். தண்ணீர் கசிவு காரணமாக கட்டடத்தின் அடித்தளம் பலமிழந்து இருந்த நிலையில், ஐந்து மாடி கட்டடம் திடீரென இடிந்து விழுந்தது.

இதில் வீடுகளில் இருந்தவர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். தீயணைப்புப் படையினர் மற்றும் மீட்புக் குழுவினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இதில், இடிபாடுகளில் சிக்கி ஒரு குழந்தை உள்பட 16 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த 4 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உள்நாட்டுப் போர் நடைபெற்று வரும் சிரியாவில், அலெப்போ நகரமானது அமெரிக்க ஆதரவு குர்திஷ் படையினர் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்குள்ள பெரும்பாலான குடியிருப்புகள் தாக்குதலில் சேதமடைந்துள்ளன. அலெப்போ நகரமானது ஒரு காலத்தில் சிரியாவின் வார்த்தக மையமாக இருந்து வந்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.